# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 28 புதன்கிழமை (13-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:222




யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று 512 ஆவது பிரிகேட் அலுவலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். முதலாவது படத்தில் நகரசபைத் தலைவர்கள், பிரதேசசபைத் தலைவர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் காணப்படுகின்றனர். இரண்டாவது படத்தில் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் உரையாற்றுகிறார். அருகே மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன மாகாண பிரதம செயலாளர் ஜீ.கிருஷ்ணமூர்த்தி, ஈ.பீ.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அமர்ந்து இருக்கின்றனர். மூன்றாவது படத்தில் பிரதேசசபைத் தலைவர்களும், அவர்களின் பின்னே திணைக்களத் தலைவர்களும் காணப்படுகின்றனர்.

*படங்கள்:பொ.இராஜேஸ்வரன்*

# குறுகிய நேரத்தில் கூடிக் கலைந்த யாழ். மாவட்ட இணைப்புக் குழு!

## தமது கருத்துக்களை தெரிவிக்கமுடியாது ஏமாற்றத்துடன் திரும்பிய அதிகாரிகள்

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்13

**யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக் குழு நேற்று குறுகிய நேரத்தில் - சுமார் இரண்டு மணி நேரம் - கூடிக் கலைந்தது. உருப்படியான கலந்துரையாடலுக்கோ கருத்துப் பரிமாற்றத்துக்கோ வாய்ப்பு இருக்கவில்லை. ஆக்கபூர்வமான முடிவுகளும் மிகக் குறைவாகவே மேற்கொள்ளப்பட்டன.**

**இணைப்புக் குழுக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்த அரசாங்கத் திணைக்களங்களின் உயர் அதிகாரிகளில் பலரும் தமது கருத்துக்கள், கோரிக்கைகளை முன்வைக்க முடியாத நிலையில் ஏமாற்றத்துடனும் மனச் சோர்வுடனும் திரும்பினர்.**

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் ஏனைய மாவட்டங்களில் மாவட்ட இணைப்புக் குழுக்கள் இயங்க முடியாதநிலை. ஆனால் ஜனாதிபதியின் விசேட நடவடிக்கையின் பேரில் யாழ். மாவட்டத்தில் மட்டும் இணைப்புக்குழு தொடர்ந்து இயங்குகின்றது.

கடந்த ஜுலை மாதம் இணைப்புக்குழுக் கூட்டம் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெற்றது. நேற்றைய கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தின் 512 ஆவது படையணியின் தலைமை அலுவலகத்தில்(ஞானம்ஸ் ஹோட்டலில்) நடைபெற்றது.

முற்பகல் 9மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மு.ப.சுமார் 10.20மணியளவிலேயே கூட்டம் ஆரம்பமாகியது. நண்பகல் சுமார் 12.40மணியளவில் கூட்ட நிகழ்வுகள் முடிவுற்றன.

நேற்றைய இணைப்புக் குழுக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்புக் குழுக் கூட்டம் தேர்தல் சட்டத்துக்கு முரண்

### சுரேஷ் அணி, கூட்டணி கண்டனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் உட்பட பல்வேறு திணைக்களத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்து இணைப்புக் குழு கூட்டத்தை நடத்துவது தேர்தல் சட்ட விதிகளை மீறும் செயல்"

மேற்கண்டவாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சுரேஷ் அணி தேர்தல் ஆணையருக்கு முறையிட்டுள்ளது.

தேர்தல் நடக்கவிருக்கும் நேரத்தில் வாக்காளர்களைக் கவரும் செயல் இது என்றும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## கரு ஜெயசூரியா தலைமையிலான குழு மீது கிரனேட் தாக்குதல்!

கொழும்பு,செப்.13

கம்பஹா மாவட்டத்தில் ராகமவில் தேர்தல் பிரசாரப்பணியில் ஈடுபடச் சென்ற ஐ.தே.க. தவிசாளர் கரு ஜெயசூரியா தலைமையிலான குழு மீது நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நால்வர் உடனடியாக ராகம வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

கரு ஜெயசூரியாவுடன் அநுரா பண்டாரநாயக்க, ஜோன்அமரதுங்க,

(12ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையில் கரை ஒதுங்கிய சடலம்

வேலணை:செப்.13

வேலணைத்துறையில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஒரு ஆணின் சடலம் நேற்றுக்காலை கரை ஒதுங்கியது.

நீலநிற ஜீன்ஸும், கறுப்புநிற பெல்ட்டும் சடலத்தில் காணப்பட்டன.

கடற்றொழிலாளர்களால் கண்டெடுக்கப்பட்ட இந்தச் சடலத்தை பதில் நீதிவான் திருமதி சறோஜினி தேவி இளங்கோவன் நேற்று பார்வையிட்டார்.

இந்த சடலத்தை விசாரணைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி அவர் உத்தரவிட்டார்.

சடலம் தொடர்பான விசாரணைக்கான ஏற்பாடுகளை அந்தப் பகுதி கிராமசேவையாளர் கார்த்திகேசு சிவஞானம் செய்திருந்தார்.

## பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

மட்டக்களப்பு,செப்.13

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவர்கள் நேற்று முன்தினம் முதல் நடத்திய பகிஷ்கரிப்புப் போராட்டம், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் போராட்டம் நடத்திய மாணவர்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தியதை அடுத்து நேற்று நண்பகல் கைவிடப்பட்டது.

(முன்வந்த செய்தி 7ஆம் பக்கத்தில்)

## தேர்தல் ஆணையாளரின் வீட்டுக்கு முன் ஆர்ப்பாட்டம்

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவின் வீட்டுக்கு முன்பாக நூற்றுக்கணக்கானவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போலிவாக்குகளை கண்டுபிடிக்க வாக்காளர் அட்டைகளுக்கான ஸ்ரிக்கர்களை இரகசியமாக அச்சிட்டதன் மூலம் மோசடி செய்ய முனைந்ததாகக் கூறி தேர்தல் ஆணையாளர் பதவி விலக வேண்டும் என்று தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

தலவத்தகொடவில் உள்ள தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவின் வீட்டுக்கு முன்பாக நேற்றுக்காலை 8.30மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் இரண்டு மணிநேரம் தொடர்ந்தது.

அங்கு வந்த பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து அவரது வீட்டுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. (இ-8-3)

## 16 சடலங்கள் நேற்று புலிகளிடம் ஒப்படைப்பு!

### இருதரப்பினரும் குறுகிய நேரம் தாக்குதல் தவிர்ப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

அரியாலை, செம்மணி ஆகிய பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சண்டையின்போது படையினரால் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் 16 சடலங்கள் நேற்றுப் பிற்பகலில் நீர்வேலி தரவைப் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

யாழ்.வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இந்தச்சடலங்களை நேற்றுக் காலை பொறுப்பேற்ற படையினர் நீர்வேலிப்படைமுகாமில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளிடம் கையளித்தனர்.

தமது வாகனத்தில் இந்தச் சடலங்களை எடுத்துச் சென்ற செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் அவற்றை நீர்வேலி தரவைப் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று விசேட கப்பல் சேவை 1000 பயணிகள் செல்வர்

யாழ்ப்பாணம்,செப்.13

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு ஆயிரம் பயணிகளை அழைத்துச் செல்வதற்கான விசேட கப்பல் சேவை இன்று இடம்பெறவிருப்பதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் பயணம் செய்வதற்கு பயணச்சீட்டுப் பெற்றவர்கள் இன்று காலை 6மணிக்கு யாழ்.சிங்கள மகா வித்தியாலயத்துக்கு வரவேண்டும் என்றும் -

இங்கிருந்து பயணிகளை காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லும் பணி காலை 10.30மணிக்கு பூர்த்தி செய்யப்படவிருப்பதால் அதற்கு முன்னர் சமுகம் தரவேண்டும் என்றும் சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது.

பயணிகள் தமக்குத் தேவையான உணவு மற்றும் குடிதண்ணீரை எடுத்து வரவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (இ-3)

# அறிவித்தல்

நாயன்மார்கட்டு முறிவு, நெரிவு வைத்தியசாலை இல. 111, செம்மணி வீதி, நாயன்மார்கட்டில் (வெய்யிலுகந்த விநாயகர் முன்பாக) இயங்குகிறதென்பதைப் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றேன்.

வைத்திய கலாநிதி
ஏ. உமாகாந்தன்

(78332)

---

# மக்ஷல் ஹவுஸ்

மற்றும் ஒரு தொகுதிப் படங்கள்
பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

20,யூபிலி பஜார்,
யாழ்ப்பாணம்.

(78349)

---

# கண்ணீர் அஞ்சலி

தீவகக் கல்வி வலயத்தின்
இந்துசமய பாட சேவைக்கால ஆலோசகர்
செல்வி இ.ஜெயலட்சுமி
அவர்களது அன்புத் தாயார்

## திருமதி இராமலிங்கம் நாகமுத்து

அவர்களின் மறைவு அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்வி அபிவிருத்தி, திட்டமிடல் பிரிவு
தீவக கல்வி வலயம் - வேலணை.

(78432)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்றியவரும்
தற்பொழுது கொழும்பில் வசித்தவருமாகிய

## அமரர் பொன்னம்பலம் இராஜகுலசேகரம்

(ராஜன்)

12.09.2000 அன்று கொழும்பில் காலமாகிய செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*மத்திய சந்தை முன்பாக,*
*மானிப்பாய்.*

(78340)

சுந்தர்சன் உரிமையாளரும்
ஊழியர்களும்

---

# அகமுருகி அஞ்சலிக்கின்றோம்

இலக்கண வித்தகர்

## இராமசாமி நமசிவாய தேசிகர்

சரிந்ததுவோ தமிழ் முனிவன் தேகம் மண்ணில்
சரிந்ததுவோ நம்கம்பன் கழகத் தூணே
புரிந்துவிட வில்லை யென்றாற் முறுவல் காட்டிப்
புரிய வைத்த தவவடிவம் மறைந்த தாமோ

இலக்கண நூல்; இலக்கியங்கள் எளிமையாக
எமக்குரைத்த இன்புருவம் இல்லைத்தானோ
கலக்கமிது கழகத்தோர்க் கல்ல. கற்ற
கவின் புலமை உலகத்துக் காயிற் றம்மா

*ஆத்ம சாந்திக்காக தலை தாழ்த்துகின்றோம்.*

வடமராட்சி கம்பன் கழகத்தினர்

(78343)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தின் உத்தியோகத்தர்
திருமதி நேசபவானி தியாகச்சந்திரன்
அவர்களது அன்பு மாமியார்

## அமரர் தேவகி தியாகரர்சா

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியடைகிறோம். அன்னாரின் பிரிவில் துயருறும் அன்னாரின் குடும்பத்தவருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச் சங்கம்,*
*பிரதேச செயலகம்,*
*வலி.தெற்கு, உடுவில்.*

(78347)

பிரதேச செயலக அனைத்து
உத்தியோகத்தர்களும்.

---

# யாழ்.இந்துவில் முழுநிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்13

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டிலான முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சி.குகதாசன் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் 'பாலியல் நோய்கள்-எய்ட்ஸும் அதன் விளைவுகளும்' என்னும் தலைப்பில் யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் கருத்துரை வழங்குவார்.

(இ-3)

# தேர்தல் ஸ்ரிக்கர் விநியோகம்

கொழும்பு,செப்13

வாக்காளர் அட்டையில் ஒட்டுவதற்காக அச்சிடப்பட்ட விசேட ஸ்ரிக்கர்கள் சகல மாவட்டங்களுக் கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

போலி வாக்காளர் அட்டைகளின் புழக்கத்தை தடுக்கவே இந்த ஸ்ரிக்கர்கள் அச்சிடப்பட்டதாக அவர் கூறினார்.

வாக்காளர் அட்டைகள் இம் மாதம் 18ஆம் திகதி தபாலில் சேர்க்கப்படும் எனவும் அவை 21 ஆம் திகதி முதல் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் -

ஒக்ரோபர் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆயினும் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் - அவர் தெரிவித்தார்.

இந்த ஸ்ரிக்கர் பிரச்சினை காரணமாக ஏற்கனவே தேர்தல் ஆணையாளர் சர்ச்சைக்கு உள்ளாகியிருப்பது தெரிந்ததே.

(இ-8)

# வேட்பாளர்கள் ஆயுதம் வைத்திருக்க அனுமதி

கொழும்பு,செப்13

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் தமது தற்பாதுகாப்புக்கு மாத்திரம் ஆயுதம் ஒன்றினை வைத்திருக்க அனுமதிக்க வேண்டும். அவர்களிடமுள்ள ஏனைய ஆயுதங்களைப் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு பொலீஸ் மா அதிபர் சகல பொலீஸ் நிலையங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

கட்சி முக்கியஸ்தர்கள், வேட்பாளர்கள் ஒன்றிற்கும் அதிகமான ஆயுதங்களை வைத்திருப்பதனாலும் அவற்றை துஷ்பிரயோகம் செய்வதாலுமே தேர்தல் வன்முறைகள் தலைதூக்கி வருகின்றன எனப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார்.

(க-4)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திரேசம்மா இரத்தினசபாபதி

51, ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி திரேசம்மா இரத்தினசபாபதி நேற்று (12-09-2000) காலமானார்.

இவர் இராயப்பு - சிசிலியா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பீற்றர் இரத்தினசபாபதியின்(A.O.C.G.R) அன்பு மனைவியும், இளைப்பாறிய ஆசிரியர்களான R.அந்தோனிப்பிள்ளை, R.வேதநாயகம்(B.Sc) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திருமதி பவளம் அந்தோனிப்பிள்ளை,திருமதி றீற்றா வேதநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி நளினி தர்மதேவனின் பெரிய தாயாரும், சி.தர்மதேவனின் மாமியாரும், றோபேட் கோகுலன், மேரி பிறிந்தா, நினியன், செந்தாளன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், V.S.R றவிறாஜ் (Phd. eng.), திருமதி குமுதினி றேமண்ட் (M.sc),V.R.திலக்றாஜ்(B.sc. comp.), V.E.மனோறாஜ் (B.sc. eng.), யாழினி, பாரதிறாஜ், ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (13-09-2000) பி.ப 3.30 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதாவின் சேமக்காலையில் நடைபெறும்.

*தற்காலிக முகவரி,*
கூழாவடி, ஆனைக்கோட்டை.
(மல்லிகா மிக்ஷர் தொழிலகம்
முன்பாக)

(78355)

தகவல்:
R.அந்தோனிப்பிள்ளை.
(சகோதரன்)

## திருமதி விஸ்வலிங்கம் சிவகாமிப்பிள்ளை

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி விஸ்வலிங்கம் சிவகாமிப்பிள்ளை 12-09-2000 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் சிவபதமெய்தியுள்ளார்.

இவர் காலஞ்சென்ற விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும் வரதராசா (லண்டன்), ஜெகதீஸ்வரி (முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர், வலிகாமம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், குமுதினி, தர்மராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஜனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று(13-09-2000) காலை 10 மணியளவில் அராலி வேலங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

(78351)

தகவல்:
மகள்.

## இராயப்பு மிக்கேல்பிள்ளை (அருமைத்துரை)

(லொறி உரிமையாளர் 7075)

அச்சுவேலி காலானையைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு மிக்கேல்பிள்ளை 11-09-2000 அன்று புதுக்குடியிருப்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராயப்பு - பிலோமினா (மணி)வின் அன்பு மகனும், மீரா ஜெனிசீலா (பத்திமா)வின் பாசமிகு கணவரும், தைசிலின் விஜித்தா, றொபின்சன், றொபேட், அன்றூ வசிகரன், கலிஸ்ரின் விஜித்தா (யா/புனித தெரேஸா மகளிர் கல்லூரி-அச்சுவேலி, மாணவி தரம்-6) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசீலனின் மாமனாரும் நிவேஜன், நிவேதாவின் பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு

(78321)

தகவல்
மைத்துனர்
பே.ஞானப்பிரகாசம்
(நர்மதா லொறி உரிமையாளர்)

## டாக்டர் S.S ஞானசம்பந்தர்

(சாவகச்சேரி - சிவன் கிளினிக்)

செட்டித்தெரு, நல்லூரைச் சேர்ந்த டாக்டர் S.S.ஞானசம்பந்தர் (11-09-2000) திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டாக்டர் சரவணமுத்து-அன்னபூரணம் தம்பதிகளின் புதல்வனாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 2,செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(78320)

தகவல்:
*டாக்டர் லயன்* சோ.சுந்தரராஜன்
(பேறாமகன்)

---



# சபிண்டீகரண அழைப்பு

விக்கிரம வருடம் ஆடித்திங்கள் 30ம் நாள் (14.08.2000) திங்கட்கிழமை
சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய வைபவம் விக்கிரம வருடம் ஆவணித் திங்கள் 28ம் நாள் இன்று (13.09.2000) புதன்கிழமை காலை 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*'கண்ணன் இல்லம்'*
*17/9, பிள்ளையார் வீதி,*
*திருநெல்வேலி.*

(C/12911)

திருமதி சிவஞானசுந்தரம்
திரு.ராஜ்குமார்(மகன்)

---




மாமனிதர்

காணாமற் போனோர் கதியென்ன? சிறையில் வாடும் இளைஞர் நிலையென்ன?
நீதிக்காக உழைக்க நாமுள்ளோம் இவர்கள் கண்ணீர் துடைக்க உதவுங்கள்.

திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி

(மனித உரிமைகளுக்காக உழைக்கும் சட்டத்தரணி) அவர்களை ஆதரியுங்கள்.

உரிமை உணர்வின் சின்னம் - வெல்லும் சின்னம் சைக்கிள்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

X



மக்கள் தொண்டன்

(78206)

# பிரிட்டனில் புகலிடம் கோருவோருக்கு புதியதிட்டம் விரைவில் அறிமுகம்!

லண்டன்,செப்.13

பிரிட்டனில் அரசியல் புகலிடம் கோருவோருக்கு நீதியான, மோசடியற்ற புதியதிட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று பிரிட்டிஷ் குடிவரவுத்துறை அமைச்சா பாபராவோ செய்ட் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெளிநாட்டு மாணவர்களை அதிகளவில் சேர்க்கவும், அந்நிய முதலீட்டாளர்களைக் கவரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறிய அமைச்சர் செய்ட் -

பிரிட்டனில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளில் தொழில்சார் வல்லுனர்களின் பற்றாக்குறை நிலவுவதாகவும் -

வெளிநாடுகளில் இருந்து இத்தகைய தொழில்சார் வல்லுனர்களை பிரிட்டனுக்கு அதிகளவில் அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஓ)

## இத்தாலியக் குடியுரிமையை ரத்து செய்யாத

# சோனியாவின் தேர்தல் வெற்றியை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு!

புதுடில்லி,செப்.13

இந்திய காங்கிரஸ்கட்சித் தலைவர் சோனியா காந்தி இத்தாலிக் குடியுரிமையுடன் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளதால் அவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு நீக்க ஆணை பிறப்பிக்கும்படி கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவை இந்திய உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.



சோனியா காந்தி

இத்தாலியரான சோனியா ராஜீவ் காந்தியை திருமணம் செய்து இந்தியாவில் வாழத் தொடங்கிய போதிலும் இந்தியக் குடியுரிமை பெறாது இத்தாலியக் குடியுரிமையுடன் தங்கியிருந்தார்.

1984ஆம் ஆண்டு இந்திரா காந்தியின் படுகொலையின் பின்னர் ராஜீவ் பிரதமர் பதவி ஏற்றார். அந்தச் சமயத்தில் எழுந்த விமர்சனங்களை அடுத்தே சோனியா இந்தியக் குடியுரிமைக்குவிண்ணப்பித்துப் பெற்றுக் கொண்டார்.

இத்தாலியர் ஒருவர் வேறு நாட்டுக் குடியுரிமை பெற்றாலும் அவரது இத்தாலியக் குடியுரிமை ரத்துச் செய்யப்படமாட்டாது.

இந்த வசதியினால் சோனியா தனது இத்தாலியக் குடியுரிமையை ரத்துச் செய்யாது தொடர்ந்து தக்க வைத்திருந்தார்.

ராஜீவின் மரணத்தின் பின்னர் அரசியலை விட்டு ஒதுங்கியிருந்த சோனியா, கடந்த ஆண்டு காங்கிரஸ் தலைவராகி, உத்தர பிரதேசத்தின் அமேதியிலும், கர்நாடகாவின் பெல்லாரியிலும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வென்றார்.

இத்தாலியக் குடியுரிமையை ரத்துச் செய்யாது சோனியா இந்தியத் தேர்தலில் போட்டியிட்டது தவறு என்று சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட ஹரிசிங் ஜெயின் என்பவர் தாக்கல் செய்த வழக்கை அலகாபாத் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது.

அதனை அடுத்து ஹரிசிங் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்த மனு விசாரிக்க ஏற்றுக் கொள்ளப்பட்டது. (ஓ-8)

## கடும் மோதலுக்குப் பின்னர்

# சியாராலியோன் தீவிரவாதிகளிடமிருந்து பணயக்கைதிகளை பிரிட்டன் மீட்டது!

பிரீடவுன்,செப்.13

**சியாராலியோனில் தீவிரவாதிகளால் பணயக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த ஐ.நா. அமைதிப்படையைச் சேர்ந்த தனது வீரர்களை கடும் மோதலின் பின்னர் பிரிட்டன் மீட்டது.**

தலைநகர் பிரீடவுனிற்கு கிழக்கேயுள்ள ரோகல் என்ற அடர்ந்த காட்டுப் பகுதியில் "வெஸ்ட்சைட் போய்ஸ்" என்ற தீவிரவாதக் குழுவினரால் கடத்திச் செல்லப்பட்ட 6 பிரிட்டிஷ் இராணுவ வீரர்களை திடீர்த் தாக்குதல் நடத்தி பிரிட்டிஷ் படையினர் மீட்டனர்.

அப்போது நடந்த மோதலில் 25 தீவிரவாதிகளும் ஒரு பிரிட்டிஷ் வீரரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3000 பேர்களைக் கொண்ட தீவிரவாதக் குழுவின் முக் கிய தலைவரான ஜெனரல் கலே உட்பட பெரும்பாலானவர்கள் பிரிட்டிஷ் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சியாராலியோனில் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த ஐ.நா.சபை அங்கு தனது சமாதானப் படையை கண்காணிப்பில் ஈடுபடுத்தியிருந்தது.



தீவிரவாதிகளின் முகாமை நோக்கிப் பிரிட்டிஷ் படைவீரர்கள் முன்னேறும் காட்சி.

முன்னாள் ராணுவ வீரர்களையும், ரௌடிகளையும் கொண்ட 'வெஸ்ட்சைட் போய்ஸ்' என்ற குழு சமாதான முயற்சிகளுக்கு உடன்பட மறுத்து வருகின்றனர். ஒரு சமயம் இவர்கள் நூற்றுக்கணக்கான ஐ.நா. படையினரைக் கைதுசெய்து பின்னர் விடுவித்திருந்தனர்.

1997இல் ராணுவ ஆட்சியில் ராணுவத்தில் பணிபுரிந்த இவர்கள் 98ஆம் ஆண்டு தமக்கெதிரான பொது மக்களின் கைகளையும் பாதங்களையும் துண்டித்ததும், ஆபிரிக்க சமாதானப்படையினர் ஆட்சியை விட்டு விரட்டிய சமயம் இந்தக் குழுவினர் மூன்று வாரங்களில் ஆயிரக் கணக்கான மக்களைக் கொன்று குவித்ததும் குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

**செய்தி:-பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கும் உரிமை இந்தியாவுக்கு உண்டு! - *பிரதமர் வாஜ்பாய்***



# ராணுவ ஆயுதவிற்பனை தொடர்பாக இந்தியா - இஸ்ரேல் ரகசியப் பேச்சு!

## அமெரிக்கா தடுக்கும் என்று அச்சம்!!

ஜெருசலேம்,செப்.13

இந்தியாவிற்கு ராணுவ ஆயுதங்கள் மற்றும் உளவு விமானங்களை இஸ்ரேல் விற்பதற்கு ரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளதாக ஜெருசலேமில் வெளியாகும் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிலநாள்களுக்கு முன்னர் ஆயுத விற்பனை குறித்து இந்தியாவிற்குச் சென்று இஸ்ரேலிய ராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவர் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பியுள்ளதாகவும் -

இந்த ஆயுத விற்பனையை சம்பந்தப்பட்ட இரு நாடுகளும் திரை மறைவில் நடத்தி முடிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் -

பத்திரிகைச் செய்தி தெரிவிக்கின்றது.

கடந்த ஜூன்மாதம் உளவு விமானங்கள் மற்றும் உயர் ராணுவ தொழில்நுட்பச் சாதனங்கள் ஆகியவற்றை சீனாவுக்கு விற்பனை செய்வதற்கு இஸ்ரேல் தீர்மானித்திருந்தது.

ஆனால் அமெரிக்கா தலையிட்டு விற்பனையைத் தடுத்ததுடன், இஸ்ரேல் வேறு நாடுகளுக்கு ஆயுதம் விற்பதாக இருந்தால் அமெரிக்காவுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டாய வேண்டுகோள் விடுத்திருந்தது.

ஆண்டுதோறும் ராணுவம் மற்றும் வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றுக்காக இஸ்ரேலுக்கு 300கோடி டொலர்களை அமெரிக்கா உதவி நிதியாக வழங்கி வருவதாலும், நீண்டகால நட்புநாடு என்பதாலும் இஸ்ரேல் இந்த வேண்டுகோளை மறுக்க முடியவில்லை.

உலக அரங்கில்

சீனாவுடனான வியாபாரத்தைத் தடுத்ததைப் போலவே, இந்தியாவிற்கு உளவு விமானங்கள் விற்பதை அமெரிக்கா தடுக்கக்கூடும் என்றும் அதனாலேயே இந்தியாவுடனான இராணுவத் தளபாட விற்பனையை ரகசியமாக முடிக்க இஸ்ரேல் எண்ணுவதாகவும் கருதப்படுகிறது.

## குண்டுவெடிப்பு வழக்குகளிலிருந்து

# முஸ்லிம் தீவிரவாதிகளின் மிரட்டலால் தமிழக அரசின் சட்டத்தரணி விலகல்

கோவை,செப்.13

தமிழகத்தின் கோயம்புத்தூர் மற்றும் உடுமலைப் பேட்டை ஆகிய நகரங்களில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் குறித்த வழக்குகளில் தமிழக அரசு சார்பில் ஆஜராகி வந்த சட்டத்தரணி சௌந்தர்ராஜன் மேற்படி வீழக்குகளில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

இந்த வழக்குகளில் இஸ்லாமிய இளைஞர்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதால், முஸ்லிம் தீவிரவாதிகளிடமிருந்து சௌந்தர்ராஜனுக்கு மிரட்டல் வந்ததாகவும், அதனாலேயே அவர் வழக்குகளில் ஆஜராகாமல் விலகிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. இதேசமயம் -

மத்திய புலனாய்வுப் பிரிவு சட்டத்தரணிக்கு இணையான ஊதியம் தனக்கு வழங்கப்படும் என்ற தமிழக அரசின் வாக்குறுதி நிறைவேற்றப்படாததால் குண்டுவெடிப்பு வழக்குகளில் ஆஜராவதிலிருந்து விலகியதாக சட்டத்தரணி சௌந்தர்ராஜன் அறிவித்துள்ளார். (ஓ-8)

# விலையுயர்வைக் கட்டுப்படுத்த எண்ணெய்வள நாடுகள் முடிவு!

பெற்றோலிய எண்ணெய் விலை உயர்வைக் கட்டுப்படுத்த உற்பத்தியை 3 சதவீதத்தால் அதிகரிக்க எண்ணெய்வள நாடுகள் தீர்மானித்துள்ளன.

வியன்னாவில் பெற்றோலிய விலை உயர்வு குறித்து எண்ணெய்வள நாடுகள் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட 10 பெற்றோலிய உற்பத்தி நாடுகள் மசகு எண்ணெய் உற்பத்தியை 2கோடி 62 லட்சம் பீப்பாய்களாக உயர்த்துவதென முடிவு எடுக்கப்பட்டது.

ஐ.நா. தடை காரணமாக இந்த கூட்டத்தில் ஈராக் கலந்து கொள்ளவில்லை.

பெற்றோலிய விலை உயர்வால் பாதிப்படைந்துள்ள அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் நிர்ப்பந்தத்தால் எண்ணெய்வள நாடுகள் உற்பத்தியை அதிகரித்து விலை யைக் குறைக்க தீர்மானித்ததாகக் கூறப்படுகிறது. (ஓ-8)

# அரசியல் ரீதியாக மட்டுமே காஷ்மீரில் நிரந்தரத் தீர்வு

## இந்தியத் தளபதி கருத்து

காஷ்மீர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகவே தீர்வுகாண முடியும் என்று இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் பிரகாஷ் மாலிக் கூறியுள்ளார்.

சண்டிகரில் ராணுவ விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இக்கருத்தைத் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரதேசத்தில் நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 10 ஆயிரம் இந்திய ராணுவ வீரர்கள் குறிப்பிட்ட பங்களிப்பை மட்டுமே வழங்க முடியும் என்றும், ஆனால் அப்பகுதியின் நிரந்தரமான, நியாயமான சமாதானத்துக்கு, அரசியல் ரீதியாகவே தீர்வுகாண முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-8)

குடாநாட்டில் அரசியல் சர்வாதிகாரத்தை துடைத்தெறிய கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்ற உங்கள் எண்ணம் நிறைவேற்ற எம்மை ஆதரித்திடுவீர்!

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம்

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

(புளொட் + ஈரோஸ்)

X

# அரச ஊழியர்களின் சம்பளத்தின் பத்து சதவீத உயர்வு ஒக்ரோபரில்

கொழும்பு, செப். 13

அரச ஊழியர்களின் தற்போதையசம்பளத்தின்பத்துச் சதவீதம்ஒக்ரோபர்மாதம்முதலாம்திகதியிலிருந்துஅதிகமாக வழங்கப்படவுள்ளது.

எனினும் இத்தொகை ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாக இருக்க மாட்டாது என்றும் அத்துடன் ஒய்வூதியக் கணிப்பீட்டிலும் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் 12 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட சம்பளம் பெறுவோருக்கு அண்மையில் வழங்கப்பட்ட 600 ரூபா இதனுடன் சேர்க்கப்படும். நாள் சம்பள அடிப்படையில் பணியாற்றுவோருக்கு மாதத்தின் 21 நாள்களுக்கு நாளொன்றுக்கு 47 ரூபா 62 சதம் வழங்கப்படும்.

ஓய்வூதியர்களுக்கும் 10 சதவீத உயர்வு வழங்கப்படவுள்ளது இந்தத் தொகையானது 500 ரூபாவுக்கு மேற்படமாட்டாது. ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒய்வூதியர்கள் பெறவுள்ள 500 ரூபாவினுள் ஓகஸ்ட் மாதத்தில் இருந்து வழங்கப்படும் 300 ரூபாவும் அடங்கும்.

இந்த இடைக்காலப்படிகள் அண்மையில் அமைக்கப்பட்ட சம்பள மற்றும் ஒய்வூதிய ஆணைக்குழுக்களின் சிபார்சுகள் அமுல்படுத்தப்படும் வரை வழங்கப்படவுள்ளன. என்று தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கிருஸ்ணர் தியாகராஜா**

(முன்னாள் ராக்சி சாரதி)

அன்னை மடியில் 1934 - 12 - 15

இறைவன் அடியில் 2000 - 08 - 14

திதி: 13 - 09 - 2000

இமைப் பொழுதில் மீளாத்துயிலில் புறப்பட்ட அன்புத் தெய்வமே! உங்களை நாம் பிரிந்தாலும் தங்களின் நினைவு எம் நெஞ்சங்களில் கல்மேல் எழுத்துப் போல் என்றும் நிலைத்திருக்கும்!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

சுப்பிரமணிய கோயில் வீதி,
வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை. (78297)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 13

கோண்டாவில் வடக்கு கலைவாணி பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கலைவாணி வீதி விளையாட்டு மைதானத்தில் பாடசாலை பொறுப்பாசிரியர் திருமதி கருணாநிதி இந்திரகலா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் உதவிப் பிரதேச செயலர் சி. வேன் முருகோன் பிள்ளை கலந்து கொள்வார். (க)

## சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 13

அண்மையில் நடைபெற்ற எழுதுநர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில் தமிழ் தட்டச்சுப் பயிற்சி பெற்றவர்களை அதற்குரிய சான்றிதழுடன் தம்மை சந்திக்கும்படி யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (க)

## தங்கநகை கண்டெடுப்பு

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் துர்க்காபுரம் சிற்றுண்டிச்சாலையில் தவற விடப்பட்ட தங்க நகை ஒன்று நேற்று, கண்டெடுக்கப்பட்டு பிரஸ்தாப சங்கத் தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் உரிய விவரத்துடன் தொடர்பு கொண்டு நகையைப் பெற்றுக் கொள்ளாலம் என்று சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (க)

## மகா பொல கொடுப்பனவு

யாழ்ப்பாணம். செப். 13

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் 97, 98 ஆம் ஆண்டு மாணவர்கள் தமது மகாபொல கொடுப்பனவுகளை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு அதன் இயக்குநர் ரி. ராஜரட்ணம் கேட்டுள்ளார்.

இந்தக் கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (க)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி இராசரத்தினம் பகவதிஅம்மா**

மலர்வு 20—02—1923

உதிர்வு 25—08—1999

திதி: 13—09—2000

அன்பிற்கும் அறிவிற்கும் உரிய
பாசமிகு எங்கள் அன்னையே!
ஆண்டு ஒன்று மறைந்தாலும்
உங்கள் அன்பு நினைவலைகள்
என்றென்றும் எங்கள் நெஞ்சை விட்டு மாறா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தேவாலய வீதி,
சங்கானை. (78290)

## இன்று நடப்பவை

கந்தரோடை கலைமதி சனசமூக நிலையத் திறப்பு விழாவும் மழலைகள் கல்விப் பூங்காவின் பாலர் விளையாட்டு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறவுள்ளன.

கற்பொக்கணை வீரகத்தி விநாயகர் ஆலய வீதியில பாலர் விளையாட்டு விழா இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக மற்றும் யாழ். உயர்தொழில் நுட்ப நிறுவனங்களின் விரிவுரையாளர் இ. விஜயகுமார் தலைமையில் நடைபெற உள்ள இந் நிகழ்வுகளில் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் தி. மா. செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-152)

* * *

பருத்தித்துறை இராம கிருஷ்ண சேவாச்சிரமத்தில் இன்று புதன்கிழமை நாட்டில் சமாதானம் வேண்டி பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. அத்துடன் சிரமதானப் பணியும் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளில சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொள்வர். (க-3)

* * *

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் சங்கானைப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட திட்டச்சு மற்றும் நடமாடும் பெண்கள் பயிற்சி நெறிகளில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சித்தங்கேணி விநாயகர் வீதியில் அமைந்துள்ள இளைஞர் சேவைகள் மன்ற பயிற்சி நிலையத்தில் இடம்பெறும்.

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வநாயகி கதிரவேலு

காரைநகரைப் பிறப்பிடமாகவும் 6/3, கன்னாதிட்டி யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் தற்போது ஆஸ்திரேலியாவை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி தெய்வநாயகி கதிரவேலு 12—09—2000 செவ்வாய்க்கிழமை காலை ஆஸ்திரேலியாவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்—நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிரவேலு (மலாயன் பென்சன்)வின் அன்பு மனைவியும், நாகராஜேஸ்வரி (கொழும்பு), மகேஸ்வரி (யாழ்ப்பாணம்), முருகேசு (கொழும்பு), தியாகராசா (ஆஸ்திரேலியா), புவனேஸ்வரி (ஆஸ்திரேலியா), நடராஜா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜசிங்கம் (கொழும்பு), தம்பையா (யாழ்ப்பாணம்), யோகலட்சுமி (கொழும்பு), கேதாரேஸ்வரி (ஆஸ்திரேலியா), அலோசியஸ் (ஆஸ்திரேலியா), ஜோன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புமாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14-09-2000) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மருமகன் தம்பையா
மகள் மகேஸ்வரி (கிச்சி)

6/3, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (78357)

## ஐந்தாம் மாத நினைவஞ்சலி



நுணாவில் சந்தி - சாவகச்சேரி

**அமரர் க. தனபாலசிங்கம் [சிவலிங்கம்]**

(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்)

மலர்வு: 26-12-1941

உதிர்வு: 18-04-2000

பாசத்தின் ஒளி விளக்காய்
எம்மை வழி நடத்தி
எம் குடும்பம் காத்தவரே!
உங்கள் உறவுகளை மீளாத்துயரில்
விட்டுச் சென்ற அன்புத் தந்தையே!
உங்கள் வழி நின்று
தேடுதையா கண்கள் உம்மை
இவ்வுலகில் காணவே.

உமது பிரிவால் வாடும்
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தற்போதைய முகவரி:-
ஆஸ்பத்திரி - வீதி,
சங்கானை. (78341)

உதயன்

## கவனத்தில் கொள்வரா?

தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை கொழும்பு அரசியல் தலைவர்களும், சிங்கள மக்களும், பௌத்த குருமாரும் வழங்க மாட்டார்கள் என்பது தமிழ் மக்களுக்கு மட்டுந்தான் இதுவரை தெரிந்த விடயம். ஆனால் இப்போது, சர்வதேச மட்டத்தில், ஆகக் குறைந்தது இலங்கை விவகாரங்களில் அக்கறை உள்ளவர்களுக்கும் அது புரிந்துவிட்டது.

அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸின் உறுப்பினர் பிராட் ஷேர்மன் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சருக்கு எழுதிய கடிதம் இதனையே பிரதிபலிக்கிறது.

தமிழ் மக்களுக்கு சமஅந்தஸ்தை வழங்கக் கூடியதான சுயாட்சி ஒன்றைச் சிங்கள மக்களின் அரசாங்கம் ஒரு போதும வழங்கமாட்டாது; அதற்கான சாத்தியம் ஒரு துளி கூட இல்லை - என்று ஷேர்மன் தமது நாட்டு அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

கடந்த ஆறு மாதங்களில் அதிகாரப் பரவல் திட்டம் அடங்கிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு சந்திரிகா அரசு எடுத்த முயற்சியையும் அது கண்ட தோல்வியையும் முழு உலகமும் அவதானித்துள்ளது. தமிழ் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது ஒருபுறமிருக்க, அந்த அற்ப சொற்பத்தை வழங்குவதற்கும் பௌத்த குருமாரும், பேரினவாதிகளும் எதிர்ப்புத் தெரிவித்து சந்திரிகாவின் முயற்சியைத் தோற்கடித்து விட்டனர்.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு தீர்வை உருவாக்குவதற்கு சிங்கள மக்களும் அவர்களின் அரசாங்கங்களும் மனதார விரும்பாமையே இன்றைய நெருக்கடிகளுக்கும் அழிவுகளுக்கும் காரணம். இம்முறையும் அதுவே நடைபெற்றிருக்கிறது. அதனைக் கண்டு உலகம் உண்மையைப் புரிந்திருக்கும்.

தமிழர்களின் பிரச்சினையை நியாயமான முறையில் தீர்த்து வைக்கும் வண்ணம் தாம் செயற்படுவதாக சர்வதேச நாடுகளுக்குக் காட்டியே, சந்திரிகா அரசு அவற்றிடமிருந்து கடன் மற்றும் உதவிகளைப் பெற்று வருகிறது.

அமெரிக்கா போன்ற நாடுகள் கூட அதனை நம்பி, சந்திரிகாவின் சமாதானத்துக்காகவே போர் என்ற கோஷத்தை அங்கீகரித்து அவருக்கு ஆதரவளித்து வருகின்றன. ஆனால் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றை வழங்க முடியாது என்பதனை அவரது அரசமைப்புச் சீர்திருத்த முயற்சியின் தோல்வி நிரூபித்துவிட்டது. இதனை வெளிநாடுகள் காணாதிருக்கமாட்டா; நிச்சயமாகப் புரிந்திருக்கும் என நம்பலாம்.

இத்தகைய ஒரு நிலையில், இலங்கைத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புகளின் அனுசரணையுடன் தமிழர்களின் விருப்பம் என்ன என்பதை அறிந்து அவர்கள் அதனைப் பெறுவதற்கு உலக நாடுகள் உதவ வேண்டும்.

இந்தோனேஷியாவின் கிழக்குத் திமோரில் ஐ.நா.அனுசரணையுடன் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பு போன்று இங்கும் தமிழர்களின் விருப்பம் அறிவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு வடக்கு - கிழக்கில் நடத்தப்பட வேண்டும் என்ற அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் பிராப்ஷேர்மனின் ஆலோசனையை அமெரிக்கா மட்டுமன்றி உலகநாடுகள் அனைத்துமே கவனத்தில் எடுத்துக் கொள்வது நல்லது.

தமிழர்களும் இந்த நாட்டின் சமத்துவமான பிரஜைகள், அவர்களது அரசியல் அபிலாசைகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நீதியை, நியாயத்தை சிங்கள மக்களும், அவர் தம் அரசுகளும் கண்கொண்டு பார்க்க மறுக்கும் சூழ்நிலையில் -

போரைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளை அழிப்பதாகக் கூறிக் கொண்டு, தமிழ் மக்களை அழித்தும் அவர்களை அகதிகளாக்கிக் கொண்டும் இருக்கும் சூழ்நிலையில் -

தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து கூட்டாட்சி முறையின் கீழ் வாழ விரும்புகிறார்களா அல்லது பிரிந்து நின்று தனிநாடாக இருந்து செயற்பட விரும்புகிறார்களா என்பதனை அறிவதே இப்போதைய பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரக் கடைசி மார்க்கமாகவும் நல்ல மார்க்கமாகவும் அமையும்.

அமெரிக்கா மட்டுமன்றி ஏனைய நாடுகளும் இது குறித்துச் சிந்திப்பது சிறந்ததாக அமையும்.

# யாழ். மாவட்டத்தில் வாக்காளர் அட்டைகளை கைப்பற்றி ஆள் மாறாட்டம் செய்ய முயற்சி!

## தமிழ்க் கட்சிகள் தேர்தல் ஆணையாளரிடம் முறையீடு

கொழும்பு,செப்.13

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களின் வாக்காளர் அட்டைகளைக் கைப்பற்றி ஆள்மாறாட்டம் செய்து சட்டவிரோதமாக வாக்களிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது என்று தேர்தல் ஆணையாளரிடம் தமிழ்க்கட்சிகள் முறைப்பாடு செய்துள்ளன.

தேர்தல் ஆணையாளரால் நேற்றுக் கூட்டப்பட்ட கூட்டத்தில் பங்கு கொண்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும், சுயேச்சைக்குழுக்களின் பிரதிநிதிகளும் இந்த முறைப்பாட்டைச் செய்தனர்.

"யாழ். மாவட்டத்திலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களின் வாக்காளர் அட்டைகளை அபகரித்து சட்டவிரோதமாக வாக்களிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"எனவே வாக்களிப்பின் போது அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது விசேட அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிடவேண்டும்" என்று தமிழ்க் கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

இந்தக் கோரிக்கையை நிராகரித்த ஈ.பி.டி.பி. அமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராசா, குடாநாட்டில் இடம் பெயர்ந்த மக்களில் பலர் தமது அடையாள அட்டைகளை இழந்துவிட்டனர். எனவே வாக்களிப்பின் போது அடையாள அட்டையைச் சமர்ப்பிக்குமாறு கோருவது நியாயமல்ல என்று தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தில் அடையாள அட்டை இல்லாமல் நூறு யார் கூடத் திரிய முடியாது. மக்களின் ஜீவாதாரமான தேவையாக அடையாள அட்டை உள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் தமது உடைகளை விட்டு வந்தபோதும் அடையாள அட்டையைக் கட்டாயம் கொண்டு வந்துள்ளனர் என்று சுயேச்சைக்குழு 6 இன் உறுப்பினர் டாக்டர் சுப்பையா தெரிவித்தார்.

"சகல கட்சிகளும் கோரிக்கை விடுத்தால் வாக்களிப்பின்போது அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்ய முடியும்" என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இறுதியில் இந்த விவகாரம் தொடர்பாகப் பரிசீலனை செய்து ஒரு வாரத்தில் பதிலளிப்பதாக ஈ.பி.டி.பி. பிரதிநிதி எஸ்.தவராசா தெரிவித்ததை அடுத்து அடுத்த கூட்டத்தில் இந்த விடயத்தை ஆராயவதென முடிவு செய்யப்பட்டது.(இ-3)

# ஒரு வருடம் வெலிக்கடைச் சிறையிலிருந்த வசாவிளான் யுவதி விடுவிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,செப்.13

கடந்த ஒரு வருட காலமாக அவசரகாலச் சட்ட விதிகளின் கீழும் மற்றும் கைக்குண்டுகள் சம்பந்தப்பட்ட பயங்கர ஆயுதங்கள் சட்டத்தின் கீழும் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் வடபகுதி யுவதி ஒருவரை விடுதலை செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

பலாலி வசாவிளானைச் சேர்ந்தவரும் தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் பெண்கள் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவருமான அருமைநாயகம் ராஜிலா (வயது25) என்பவரே விடுவிக்கப்பட்டிருப்பவர் ஆவார்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி வத்தளையில் உள்ள தமது சகோதரியின் வீட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இச்சந்தேகநபர் கொழும்புக் குற்றப் புலனாய்வுப் பொலீஸ் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் செப்ரெம்பர் 9 ஆம் திகதி கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மூன்று மாதகால விளக்க மறியலின் பின்னர் இச்சந்தேகநபரின் சார்பில் செய்யப்பட்ட பிணை விண்ணப்பம் கொழும்பு பிரதம நீதிவான் டி.ஜி. குலதிலகவினால் நிராகரிக்கப்பட்டது.

கைக்குண்டுகள் வைத்திருந்ததாகவும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இருந்து கொண்டு ஆயுதம் தாங்கிப் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதலில் ஈடுபட்டதாகவும் இச்சந்தேகநபர் மீது பொலீஸார் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருப்பதனால் பிணை வழங்கும் அதிகாரம் தனக்கு இல்லை எனப் பிரதம நீதிவான் பிணை மறுப்பதற்கான தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து இச்சந்தேகநபரின் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் பிணை மனு, சட்டத்தரணி ஜெயதேவி இராயப்பு ஊடாகத் தாக்கல் செய்யப்பட்டது. இப்பிணை மனுவை ஆட்சேபித்துக் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பொலீஸ் பிரிவின் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் கே.என்.ஜே.டபிள்யூ. வெத்தசிங்க தமது சத்தியக் கூற்றினைத் தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நீதியரசர்கள் எச்.எஸ். யாப்பா, பி.எச்.கே. குலதிலக ஆகியோர் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிணை மனுவை ஆதரித்துச் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தமது வாதங்களை நிகழ்த்தினார்.

ஒரு வருட காலமாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் நபருக்கு எதிராகச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்வதற்குச் சட்ட ரீதியான சாட்சியமோ, ஆதாரமோ கிடையாது என்று சட்டத்தரணி ஸ்ரீகாந்தா நீதியரசரிடம் தெரிவித்தார்.

சந்தேகநபரிடம் இருந்து குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் எதுவும் பெறப்படவில்லை என்பதை இன்ஸ்பெக்டர் வெத்தசிங்க தமது சத்தியக் கூற்றில் ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று குறிப்பிட்ட சட்டத்தரணி, சந்தேக நபரிடமிருந்து கைக்குண்டுகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் சந்தேகநபருக்கு எதிராகப் பொலீஸாரால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும் அவர் வாதாடினார்.

இக்கட்டத்தில் எதிர் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி தர்ஷன நாணயக்கார சந்தேகநபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதில்லை என்ற முடிவுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் வந்திருப்பதாக நீதியரசர்களிடம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சந்தேகநபரை விடுதலை செய்யும் உத்தரவை சட்டமா அதிபர் திணைக்களம் விரைவாகக் கொழும்பு பிரதம நீதிவானுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

சந்தேகநபர் விடுதலை செய்யப்பட்டுவிட்டாரா என்பதை உறுதிப்படுத்துவதற்காக இவ்வழக்கை அடுத்த மாதம் 20ஆம் திகதி நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக நீதியரசர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-6)

# 30 பேருக்கு மீண்டும் நியமனம்

வலி.கிழக்கு,செப்.13

யாழ். மாவட்டத்தில் உள்ள உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர்கள் 30 பேருக்கு மீண்டும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர்களாகக் கடமையாற்றிய இந்த 30 பேரும் பல மாதங்களாக வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களின் விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்பு கொண்டதை அடுத்து இவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர்களுக்கு நிரந்தர நியமனத்தினையும் விரைவில் பெற்றுத் தருவதாக டக்ளஸ் உறுதியளித்ததாக யாழ்.மாவட்ட உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர்கள் சங்கத்தின் செயலாளர் இரா.தயாகரன் தெரிவித்தார். (இ-180)

# தென்மராட்சிப் பகுதி அரச அலுவலகங்களின் ஆவணங்களை மீட்க நடவடிக்கை எடுக்குக!

## சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,செப்.13

தென்மராட்சிப் பகுதியில் செயற்பட்டு வந்த அரச அலுவலகங்கள், வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பாடசாலைகள் என்பன தமது முக்கிய ஆவணங்களை மீட்க முடியாது உள்ளன. அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன் அவற்றை மீட்க உதவுவதற்கு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் வழங்கிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற சுதந்திரமானதும் நடுநிலையானதுமான தங்கள் அமைப்பின் உதவியால் தென்மராட்சி யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும்படி வேண்டுகின்றோம்.

அப்பகுதியில் வசித்த மக்கள் திடீரென ஏற்பட்ட ஆயுத மோதலால் விலையுயர்ந்த பொருள்களையும் ஆவணங்களையும் விட்டுவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர். வங்கிகளில் உள்ள பணத்தை எடுப்பதற்குரிய வங்கிப் புத்தகம் இல்லாமையினால் அன்றாட வாழ்க்கைச் செலவுக்கு கஷ்ட முறும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த விடயத்தில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்துடனும் இணைந்து நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகிறோம்.

இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதி ஒன்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துக்கும் வழங்கப்பட்டது. (இ-10)

## எவரும் கைதாகவில்லை

அம்பாறை மாவட்ட பொ.ஐ.முன்னணி வேட்பாளர் செழியன் பேரின்பநாயகம் மற்றும் அமைப்பாளர் சதாசிவம் மனோகரபிள்ளை ஆகியோரின் கொலை தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பாக கல்முனைப் பொலீஸார் சுமார் 25 பேரை விசாரணை செய்துள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் இவர்களை அந்த இடத்தில் வைத்தே சுட்டுக் கொலை செய்து விட்டுச் சென்றிருந்தனர் என விசாரணையில் தெரிய வந்துள்ளது என பொலீஸார் தெரிவித்தனர். (இ)

## பாடசாலை வேறு இடத்தில் இயங்குகிறது

நல்லூர்,செப்.13

நல்லூர் ஸ்தான சி.சி. தமிழ்க் கலவன் பாடசாலை தற்காலிகமாக யாழ். செங்குந்த இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வழமைபோன்று காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை பாடசாலை நடைபெறுவதால் மாணவர்கள் புதிய இடத்தில் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறும் அதிபர் திருமதி ரி.கமலராசா தெரிவித்தார். (ஐ-131)

## 19ஆம் திகதி முதல் வாக்காளர் அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகம் இம்மாதம் 19ஆம் திகதி தொடக்கம் 2ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

வாக்காளர் அட்டைகளை தபாலகத்துக்கு அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகளை யாழ்.தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

6லட்சத்து 22 ஆயிரத்து 323 வாக்காளர் அட்டைகளும் இரு வாரங்களுக்குள் விநியோகிக்கப்பட்டுவிடும் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வழமையைப் போன்று தபால் அலுவலகங்கள் மூலம் இந்த வாக்காளர் அட்டைகள் விநியோகம் நடைபெறும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

## புலிகள் தரப்பில் அறுவர் உயிரிழப்பு

வவுனியா,செப்.13

கடந்த 10ஆம் திகதி திருகோணமலை மொறவோவ பகுதியில் படையினர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தமது தரப்பில் உயிரிழந்த மூவரின் பெயர் விவரங்களை விடுதலைப்புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

★ மேஜர் நக்கீரன் (கந்தசாமி சுதாகரன் - கிளிநொச்சி)

★ லெப். சதானந்தன் (அருளானந்தம் அருள்நாதன் - திருகோணமலை)

★ 2ஆம் லெப். மலர்நிதி (எதிர்மனசிங்கம் பிறேமலதா - திருகோணமலை) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

அதேதினம் அரியாலைப் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற மோதல்களில் -

★ பைந்தமிழ் (மகேஸ்வரன் ரதீஸ்வரி - யாழ்ப்பாணம்)

★ துர்க்கா (வேதநாயகன் துஸ்யந்தி - யாழ்ப்பாணம்)

★ குயில் (தனபாலசிங்கம் ஸ்வர்ணா -(முல்லைத்தீவு) ஆகியோர் உயிரிழந்துள்ளதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-8)

### நாளை

ஆவணி 29
வியாழக்கிழமை
*திதி:* பிரதமை
பின்னிரவு 1.52 வரை
*நட்சத்திரம்:* பூரட்டாதி
பிற்பகல் 1.17 வரை
மஹாளய பட்சாரம்பம்
*சுபநேரம்:* 7.33 - 9.03
*ராகுகாலம்:* 1.33 - 3.03
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எல்லோரும் தமது உரிமைகளையே வற்புறுத்தி அந்த மட்டில் நின்று விடுகின்றார்கள். இத்துடன் தத்தம் கடமைகளையும் நன்கு உணர்ந்து பணியாற்றின், பகைமையோ குழப்பமோ ஏற்பட வழியிராது.

*- காந்தியடிகள்*

# இரவு 10 மணிக்கு முன் பிரசாரக் கூட்டங்களை நடத்தி முடிக்குமாறு பொலீஸார் அறிவுறுத்து

## பாதுகாப்புக்கருதி புதிய ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.13

கொழும்பு மாவட்டத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு கச்சேரியில் அரசாங்க அதிபர் டபிள்யூ.கே.கே. குமாரசிறி தலைமையில் மாநாடு நடைபெற்றது.

உதவித் தேர்தல் ஆணையாளர் உட்பட மற்றும் பல உயரதிகாரிகள் கலந்துகொண்ட இம் மாநாட்டில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை இரவு 10 மணிக்கு முன் னர் நடத்தி முடிக்க வேண்டுமென்று கொழும்பு மாவட்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் போதி லியனகே தெரிவித்தார்.

கொழும்பு நகரில் முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் அமைச்சர்களை இலக்குவைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்துவதற்கு 23 தற்கொலைப் போராளிகளும், புலிகளின் உளவுப்பிரிவைச் சேர்ந்த 15 பேரும் ஊடுருவி உள்ளனர் என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் கொழும்பு மாவட்டத்தில் உள்ள சகல வேட்பாளர்களும் நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலீஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் விடுதலைப் புலிகளின் தாக்குதல் திட்டங்களை முறியடிக்க முடியுமெனவும் அவர் கூறினார்.

வேட்பாளர்களினதும் வாக்காளர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் மேடைக்கும் சனக்கூட்டத்துக்கும் இடையே சுமார் 30 மீற்றர் இடைவெளி இருக்கவேண்டும். இந்த நடைமுறையை கட்டாயம் அமுல் படுத்த வேண்டும் எனவும் அவர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

வீதிகளில் செல்லும் வாகனங்களைச் சோதனை செய்வதற்காக சுமார் 20 சோதனைச் சாவடிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் பிரசார மேடைகள் ஒலிபெருக்கிப் பெட்டிகளைப் பாவிப்பவர்கள் 48 மணிநேரத்துக்கு முன்னர் பொலீஸாருக்குத் தெரியப்படுத்தி சோதனைக்குட்படுத்திய பின்னரே பாவிக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை தலைநகரில் ஏதாவது அசம்பாவிதங்கள் இடம்பெறாவண்ணம் தடுப்பதற்காக 24 மணி நேரத்துச் சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

40 ரோந்துப் பிரிவினரும், 30 மோட்டார் சைக்கிள் படையணிப் பிரிவினரும் இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (இ-ரி)

# கொழும்பு நகரில் கூட்டங்கள் இல்லை!

கொழும்பு,செப்.13

தற்கொலைக் குண்டுதாரிகளும், உளவாளிகளும் நடமாடுவதால் கொழும்பு நகரில் கூட்டங்களை நடத்த அரசியல் கட்சிகளுக்குப் பொலீஸார் அனுமதி வழங்கமாட்டார்கள் என்று கொழும்பு பிரதிப் பொலீஸ்மா அதிபர் போதி லியனகே தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள், குழுக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட ஒரு கூட்டம் கொழும்பு செயலகத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றியபோதே பிரதிப் பொலீஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் 914 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. 13 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். பொலீஸார் 24 மணிநேரமும் கடமையில் இருப்பர். 20 விசேட தொலைபேசி நிலையங்களும் அமைக்கப்படும். 40 ரோந்துக் குழுக்களும், 30 மோட்டார் சைக்கிள் ரோந்துக் குழுக்களும் சேவையில் ஈடுபடும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார். (ஐ-20)

# தேர்தல் நீதியாகவும் நியாயமாகவும் நடைபெற யுத்த நிறுத்தம் செய்க!

## ஜனாதிபதியிடம் தமிழ் காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு,செப்.13

வடக்கில் நீதியாகவும், நியாயமாகவும் நடாளுமன்றத் தேர்தல் நடக்க வசதியாக உடன் யுத்த நிறுத்தத்தை அறிவிக்கவேண்டும் என்று அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ் ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அனுப்பியுள்ள அவசர 'பக்ஸ்' செய்தியிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கில் கண்மூடித்தனமான முறையில் தொடரும் விமான மற்றும் ஷெல் தாக்குதல்கள் காரணமாகப் பொதுமக்கள் தமது வீடு வாசல்களை விட்டுப் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்த வண்ணம் உள்ளனர். இந்த நிலையில் அவர்களால் தேர்தலில் வாக்களிக்க முடியாது.

வடக்கில் தொடரும் யுத்தம் காரணமாக ஒருலட்சத்து 60ஆயிரம் தமிழர்கள் தமது வீடுவாசல்களை இழந்துள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தெரிவித்துள்ளது. இதன் காரணமாக வடக்கில் நீதியாகவும், நியாயமாகவும் தேர்தல் நடத்த முடியாது என்பதை உணர முடியும்.

இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பி மீளக்குடியமர்ந்தால் மட்டுமே அவர்களால் வாக்களிக்க முடியும். •

வடக்கில் நீதியானதும், நியாயமானதுமான தேர்தல் இடம்பெறுவதை உறுதி செய்ய உடன் யுத்த நிறுத்தம் செய்யவேண்டும். அத்துடன் விமானக்குண்டுவீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களையும் நிறுத்த வேண்டும் - என்றுள்ளது. (இ-3)

# ஜனாதிபதியின் உருவப்படத்துடன் அஷ்ரப் போஸ்டர் வெளியிட முடியாது

## பௌசியின் முறைப்பாட்டை அடுத்து பணிப்பு

கொழும்பு,செப்.13

எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு தேசிய ஐக்கிய முன்னணி மேற்கொள்ளும் பிரசாரப் பணிகளின்போது தன்னையோ தனது கட்சியையோ தொடர்புபடுத்திப் பேசக்கூடாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அஷ்ரப்புக்கு ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளர்களின் போஸ்டர்களில்,பனர்களில் தனது உருவப்படத்தைப் பொறிக்கக் கூடாது எனவும் அவர் அறிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் அக்கட்சி சார்பாகப் போட்டியிடும் வேட்பாளரொருவர் ஜனாதிபதி சந்திரிகாவின் உருவப்படத்துடன் கூடிய போஸ்டர்களைப் பயன்படுத்தி வருவதாகவும் -

இதன் மூலம் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் வாக்கு வங்கிக்கு பாதகம் ஏற்படக் கூடும் எனவும் முன்னாள் அமைச்சர் பௌசி ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்தே ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்தார் என்று கூறப்படுகிறது. ஜனாதிபதியின் இந்த அதிரடி அறிவித்தலை அடுத்து ஜனாதிபதியின் உருவப்படத்துடன போஸ்டர்கள் வடிவமைத்த வேட்பாளர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் எனக் கூறப்படுகிறது. (இ-6)

# தேர்தல் களம்

# பொதுத் தேர்தலின் பின் உடனடி யுத்த நிறுத்தம்

## ஹிஸ்புல்லா கூறுகிறார்

கொழும்பு,செப்.13

பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் உடனடியான யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும். படையினரும் விடுதலைப்புலிகளும் அவர்கள் இருக்கின்ற இடங்களில் இருக்கத்தக்கவாறே யுத்த நிறுத்தம் செய்யப்பட்டு உடனடியாகப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். இந்தக் கோரிக்கையை அரசிடம் வலியுறுத்துவதே தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதான இலக்காகும்.

இவ்வாறு தபால் தொலைத் தொடர்புகள், தொடர்புச்சாதன பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

மிகச்சிறந்த 'தலைமைத்துவம்' என்ற தலைப்பில் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா வாக்காளர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கு யுத்தத்திற்கு முடிவு கண்டு சமாதானமும், அபிவிருத்தியும் மிக்கதொரு தேசத்தை தேசிய ஐக்கிய முன்னணியால் மாத்திரமே கட்டியெழுப்ப முடியும் என அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-6)

# வேட்பாளர் பட்டியலில் புலி உறுப்பினருமாம்!

கொழும்பு,செப்.13

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் பிரபல தலைவர்கள் மூவர் தேர்தலில் போட்டியிடுகின்றனர் என்றும் இவர்கள் மூன்று தமிழ்க் கட்சிகள் மூலம் போட்டியிடுகின்றனர் என்றும் 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மூன்று கட்சிகளில் நீண்ட காலமாக அரசியலில் ஈடுபட்டுள்ள தமிழ்க் கட்சி ஒன்றும் அடங்கும் என்றும் யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் விடுதலைப் புலிகள் உறுப்பினர் காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவர் என்றும் 'திவயின' பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் புலிகள் இயக்கத்தின் தலைவர் ஒருவர் பயங்கரவாத எதிர்ப்புக்கட்சி எனக் கூறிக்கொள்ளும் தமிழ்க்கட்சி ஒன்றில் போட்டியிடுகின்றார். மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் இணைப்பாளராக உள்ள ஒருவரும் போட்டியிடுகின்றார் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்படுகிறது. (இ-6-ரி)

# தேர்தல் கடமைக்கு யாழ். மாவட்டத்தில் 5 ஆயிரம் அரச உத்தியோகத்தர் தேவை

யாழ்ப்பாணம்,செப்.13

ஒக்ரோபர் 10ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் பதினோராவது தேர்தலில் யாழ். மாவட்டத்தில் மட்டும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்கு 5 ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள தேவைப்படுகிறார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

150 உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களும், 468 சிரேஷ்ட தலைமை அலுவலர்களும் 735 கனிஷ்ட தலைமை அலுவலர்களும், 3 ஆயிரத்து 223 எழுதுவினைஞர்களும் தேர்தல் கடமைகளுக்கு தேவைப்படுகிறார்கள் என்று நேற்றுமுன்தினம் தேர்தல் தொடர்பாக யாழ். செயலக அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் முடிவு செய்யப்பட்டது.

போக்குவரத்து, தொடர்பு அலுவலகம் பெறும் நிலையங்கள் போன்றவற்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில ஆராயப்பட்டது.

இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களை ஏற்றி இறக்குவதற்கும் மற்றும் தேவைகளுக்கும் 200 வாகனங்கள தேவைப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

வடபிராந்திய போக்கவரத்துச் சபையிடமிருந்தும் தனியாரிடமிருந்தும் இதற்குரிய வாகனங்களைப் பெற்றுக் கொள்வது குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (இ-5)

# பதாகைகளை அகற்ற உத்தரவு

யாழ்ப்பாணம்,செப்.13

சுவரொட்டிகள், பதாகைகள், கட்அவுட்டுகள் ஆகியவற்றை உடனடியாக அகற்றி விடுமாறு தேர்தல் ஆணையாளர் கொழும்பு மாநகர சபையையும், ஏனைய உள்ளூராட்சி மன்றங்களையும் கேட்டுள்ளார்.

தாம் ஏற்கனவே இவற்றை அகற்றும் வேலைகளை ஆரம்பித்து விட்டதாகவும் அறிவித்தல் பலகைகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஒட்டப்பட்டவற்றை அகற்றுவதற்கு சாதாரண சட்டவிதிகளின் படியே தம்மால் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் கொழும்பு மேயர் தெரிவித்தார்.

பொதுக்கூட்ட தினத்தன்று மட்டும் வேட்பாளரின் படம், சின்னம், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேட்பாளர் இலக்கம் ஆகியன அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்படலாம் எனவும் அவர் சொன்னார். (இ-6)

## 'ஸ்ரிக்கர்' விவகாரம்

# வழக்குத் தொடர்ந்தால் எதிர்த்துப் போராடுவேன்

## தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்

போலி வாக்குகளைக் கண்டுபிடிக்க வாக்காளர் அட்டைகளில் ஸ்ரிக்கர்களை இரகசியமாக அச்சிடும் திட்டம் தொடர்பாக என் மீது எவரும் வழக்குத் தொடரலாம். அதை எதிர்த்துப் போராடத் தயாராகவிருக்கிறேன். இப்படி தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக தேர்தல் ஆணையாளர் கூட்டிய கூட்டத்தில் இந்த விடயம் எடுக்கப்பட்டசமயமே அவர் இப்படிப் பதில் அளித்தார்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அலவி மௌலான இந்த விவகாரத்தைக் கிளப்பித் தேர்தல் ஆணையாளர் மீது வழக்குத் தொடர வேண்டும் என்று தெரிவித்திருந்தார். (இ-3)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையீடு

கொழும்பு,செப்.13

தேர்தல் தொடர்பான இரகசிய ஸ்ரிக்கர்கள் அச்சிடும் உரிமையைத் தனியார் நிறுவனம் ஒன்றிடம் தேர்தல் ஆணையாளர் ஒப்படைத்திருப்பது பற்றி உயர்நீதி மன்ற சட்டத்தரணி ஆனந்த குணத்திலக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

எட்டு அம்சங்கள் கொண்ட அவரது முறைப்பாட்டில் இந்த நடவடிக்கை வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமையை மீறியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார். (இ-8)




சுரேஸ் பிரேமச்சந்திரன்

இரட்டை இலை தோடம்பழ சின்னத்துக்கு வாக்களியுங்கள்.

* ஒரு காத்திரமான அரசியல் தலைமையைக் கட்டியெழுப்ப...
* திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழர் தாயகத்தின் சுயாட்சிக்காக...
* சொந்த மண்ணில் அகதிகளாகும் அவலநிலைக்கு முடிவுகாண...

சுயேச்சைக் குழு - 1 | X

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் தலைமை)



தர்மராஜா வில்சன்
இல.7

(78082)

# படையினரின் நகர்வுகளைத் தடுத்து நிறுத்த

# மோட்டார் தாக்குதலில் தங்கியுள்ள புலிகள்!

**10.09.2000 இல் வெளியான 'சண்டே ரைம்ஸ்' வார இதழில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி நேற்று முன்தினம் உதயனில் வெளியாகியது .மற்றும் ஒரு பகுதி இன்று பிரசுரமாகிறது.**

கிடைத்த தகவல்களின் படி கடந்த 3ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் படையினர் மேற்கொண்ட 'ரிவிகிரண' (சூரியக்கதிர்) இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளின் கடுமையான மோட்டார் தாக்குதல்களினால் ஏற்பட்ட பேரிழப்புக் காரணமாகவே தடைப்பட்டது என்பது புலனாகின்றது. படையினரின் முன்னோக்கிய நகர்வைத் தடுப்பதற்கு தமது மோட்டார் தாக்குதல்களிலேயே புலிகள் தங்கியிருக்கின்றார்கள் என்பது எவருக்கும் ஆச்சரியம் தரும் விடயம் அல்ல.

தங்களுக்குள்ள ஆளணிப் பற்றாக்குறை காரணமாக எந்தத் தாக்குதல் நடவடிக்கையிலும்சரி, அல்லது தற்காப்பு நடவடிக்கையிலும்சரி மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களிலேயே தங்கியிருக்கும் தந்திரோபாயத்தையே புலிகள் கடைப்பிடித்து வருகின்றார்கள் என்பது 'ஜெயசிகுறு' (வெற்றிஉறுதி) நடவடிக்கைக் காலத்தில் இருந்தே நிதர்சனமாகத் தெரிந்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் 'சூரியக்கதிர்' நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே, புலிகளின் பாதுகாப்பு நிலைகள் மீது பல்குழல் றொக்கட் லோஞ்சர்கள், பீரங்கிகள், குண்டு வீச்சு விமானங்கள் கொண்டு படையினர் தாக்கியிருந்தனர்.

படையினரின் இந்தத் தாக்குதல்களுக்குப் பின்னரும் கூட, தீவிர மோட்டார் தாக்குதல்கள் மூலம் புலிகள் பதிலடி கொடுத்திருப்பது, பிரதான இராணுவ நடவடிக்கைக்கு முன்னர், புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தி புலிகளின் எதிர்ப்பைக் குறைக்கும் முன்னோடி நடவடிக்கை பலனளிக்கவில்லை என்பதையே காட்டுகின்றது.

இந்த முன்னோடித் தாக்குதல், இலக்குகள் தவறியதால் பிழைத்திருக்கவேண்டும் அல்லது புலிகளின் நிலைகளை குறிவைப்பது தொடர்பாகக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களும் -

சம்பந்தப்பட்ட முன்னோடித் தாக்குதல்களில் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புகள், பாதிப்புகள் குறித்துக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களும் - தவறாக இருந்ததால் பிழைத்திருக்க வேண்டும்.

அத்தோடு, 'சூரியக்கதிர்' நடவடிக்கையின் போது புலிகள் மோட்டார்கள் மூலம் நடத்திய எதிர்த்தாக்குதலை, படையினரால் எதிர்த்து முறியடிக்கவும் முடியாமல் இருந்திருக்கின்றது. இதற்குப் படை நடவடிக்கை திட்டமிடப்பட்டதில் ஏற்பட்ட தவறு அல்லது எதிரியின் பீரங்கி, மோட்டார் தாக்குதல்களை இனங்கண்டு எதிர்த்தாக்குதல்களை நடத்துவதற்கு படையினரிடம் இருக்கும் கருவிகள், ஆயுத தளபாடங்களின் வலுவின்மை காரணமாக இருக்கலாம். இதுதான் காரணம் என்றால் இரண்டுமே மிகப்பாரதூரமான தவறுகளாகும்.

ஆயுத தளபாடங்களிலும், தொழில்நுட்பத்திலும் புலிகளைவிட மேலான நிலையைப் படையினர் பேண வேண்டும் என்பதற்காகவே ஆனையிறவுப் பின்னடைவுக்குப் பின்னர் படையினரின் ஆயுதக்களஞ்சியத்தை வலுப்படுத்தும் வகையில் மிகப் பெருந்தொகையான செலவில் ஆயுத தளபாடங்கள் வாங்கிக் குவிக்கப்பட்டன.

எனவே எந்த ஆயுதக் கொள்வனவும், கருவிகள், தொழில்நுட்பம் மற்றும் அதிலுள்ள வசதிகள் என்ற அடிப்படையில் கணிப்பிடப்படும்போது புலிகளின் இராணுவ வலுவோடுதான் ஒப்பிட்டுப் பார்க்கப்பட வேண்டியவையாக உள்ளன.

எனவே யுத்த தந்திரோபாயத்தில் முக்கிய அம்சமாக விளங்கும் புலிகளின் பீரங்கி மற்றும் மோட்டார்த் தாக்குதல் வலுவுடனேயே இத்தகைய ஆயுதக் கொள்வனவுத் தரமும் ஒப்பிட்டுப் பார்க்கப்படவேண்டியவையாக அமைகின்றன.

அதுதான் விடயம் என்றால் - சூரியக்கதிர் நடவடிக்கையைத் தடுப்பதற்கு புலிகள் பயன்படுத்திய மோட்டார், பீரங்கித் தாக்குதல்களைப் பார்க்கும் போது -

ஆயுத தளபாடங்கள், உத்தி, தந்திரோபாயம் போன்றவற்றை திரும்பவும் மீள அமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதா என்ற மிக முக்கிய கேள்வி படை உயர் வட்டாரங்களில் எழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் -

'சூரியக்கதிர்' நடவடிக்கைக்குப் பின்னான பாதுகாப்புப் கவுன்ஸில் கூட்டம் சூடான விவாதத்துக்கு வழி செய்ததில் ஆச்சரியம் இல்லை.

'சூரியக்கதிர்' நடவடிக்கையைத் தடுக்க முடிந்தமை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமது யுத்த உத்திகளை வகுக்கும் விடயத்தில் புலிகளுக்கு ஊக்கம் அளிக்கும் ஒருநம்பிக்கையாகவும் புத்துயிர்ப்பாகவும் அமைந்துள்ளது.

## யுத்த தந்திரோபாயத்தை மாற்றும் நிலை ஏற்படலாம்

கணிசமான அளவு சனப் பெருக்கம் உள்ள நகரச் சூழல், யாழ்ப்பாணத்தில் புலிகளின் நடவடிக்கைகளுக்கு இடையூறு தரும் அம்சமாக உள்ளது. ஆனால் மறுபுறத்தில் இதே அம்சம், நடமாடும் சிறு சிறு தாக்குதல்களை நடத்திவிட்டு பிடிபடாமல் மக்களுக்குள் மக்களாக மறைந்து கொள்வதற்கு மனித கேடயமாக அமையும் ஒரு சாதகமான நிலையையும் புலிகளுக்குத் தந்துள்ளது.

### சூழல் பாதிப்பு

பிரதான தாக்குதல் நடவடிக்கைகளுக்கான இடத்தை தேர்ந்தெடுக்கும் விடயத்தில் சனப்பெருக்கம் அற்ற இடத்தையே தேர்வு செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாட்டை மக்கள் குடியிருப்பு விவகாரம் இராணுவத்துக்கு ஏற்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கையில் சரசாலையை இராணுவம் தேர்ந்தெடுத் ததை இதற்கு ஓர் உதாரணமாக நாம் கொள்ள முடியும்.

இத்தகைய சனப்பெருக்கம் அற்ற சூழலில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது இலகுவாக புலிகளின் பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல் இலக்குகளாக படையினர் சிக்குவதற்கு அதிக வாய்ப்பாக அமையும் ஆபத்தையும் ஏற்படுத்தும்.

இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் நகரமுடியாத நிலைமையை ஏற்படுத்துவதில் சூழல் விவகாரமும் முக்கிய அம்சமாகஅமைகின்றது என்பது தெளிவு. பெரிய அளவில் இல்லாமல் சிறிய, சிறிய அளவிலான நடவடிக்கைகளை தந்திரோபாய ரீதியில் அதிகம் விரும்பும் புலிகளுக்கு இது ஒரு சாதகமான விடயம் ஆகும்.

ஆனால் பெரிய அளவிலான - மரபுரீதியான அல்லது மரபுரீதி சார்ந்த - இராணுவ நடவடிக்கைகளை அதிகம் விரும்பும் இராணுவத்துக்கு இந்தச் சூழல் அம்சம் பெரும் தடையாக - பின்னடைவாக- உள்ளது.

எனவே -

தற்போது நிலவும் நகரமுடியாத இக்கட்டான நிலையை உடைப்பதற்கு இராணுவ - அரசியல் மற்றும் மனிதாபிமான நோக்குச் சார்ந்த சிந்தனை தேவைப்படுகிறது.

இந்த நிலையில் -

குடாநாட்டில் தற்போதுள்ள நிலைகளில் இருந்து இராணுவத்தையோ அல்லது புலிகளையோ அகற்றுவதாயின் அதற்குப் பெரிய படை நடவடிக்கை ஒன்று தேவையாகின்றது.

ஆனால் இப்போது நிலவும் சூழ்நிலையில் இந்த திறக்க முடியாத இராணுவப் பூட்டைத்திறப் பதற்கு எந்தப் பக்கத்தாலும் வழியிருப்பதாகத் தெரியவில்லை.

எனவே -

தற்போது குடாநாட்டில் நிலவும் இராணுவச் சூழ்நிலையிலோ, அரசியல் சாந்த செயற்பாடுகளிலோ வரும் பொதுத் தேர்தல் கூட ஏதேனும் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருப்பதாக இல்லை.

எனவே யுத்தத்தைப் போல தற்போதைய இக்கட்டு நிலையும் தொடரவே போகின்றது.

யுத்தத்தை நடத்தும் முறை, தியாகஞ் செய்யப்படும் உயிர்கள், அளவுக்கதிகமான செலவுகள் ஆகியவை சம்பந்தப்பட்ட இந்த யுத்தம் தொடர்பாக, பொதுமக்களுக்குக் கணக்குக் காட்டவேண்டியது அரசின் பொறுப்பு என்றாலும் - பல பின்னடைவுகளையும், தோல்விகளையும், ஈட்டித் தந்துள்ள இந்த யுத்தத்தில் அவற்றுக்குப் பொறுப்பானவர்களை மக்கள் அறிந்கொள்ளாமல் இந்த வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மீதான தணிக்கை தடுத்து வருகின்றது.

### குறுக்குவழியில் பணம்

யுத்த தளபாடக் கொள்வனவு மூலம் பலர் பெரும் செல்வந்தர்களாகிவிட்டார்கள் என்பது இப்போது பலரும் அறிந்த விடயமாகும்.

யுத்தம் மூலம் செல்வத்தைச் சம்பாதிக்கலாம் என்ற கவர்ச்சி இருக்கும்வரை யுத்தமும் முடிவுக்கு வராது என்பது இப்போது பொதுவான பேச்சாகும்.

தவறான முறையில் பணம் ஈட்டும் குறுக்குவழிக்கும் கொள்வனவு செய்யப்படும் ஆயுதத் தளபாடங்கள் மற்றும் கருவிகளின் தர வீழ்ச்சிக்கும் நேரடித் தொடர்புண்டா என்பது இது விடயத்துடன் சம்பந்தப்படும் கேள்வி ஆகும்.

தற்போதைய தணிக்கை காரணமாக அம்பலப்படுத்தப்படாத பொது மக்கள் மற்றும் தேசியநலன் சம்பந்தப்பட்ட விடயங்கள் இவை ஆகும்.

பொது மக்களின் பணத்துடன் சம்பந்தப்பட்ட பாதுகாப்புச் செலவுகள் குறித்தும்-

முக்கியமாக அந்த பொதுமக்களின் பிள்ளைகளின் உயிர்களும் அவையவங்களும் இந்த யுத்தத்தில் தியாகம் செய்யப்படுவதால் அந்த யுத்தம் குறித்தும் -

அறிந்து கொள்ளும் , முழு உரிமை பொதுமக்களுக்கு உள்ளது.

பொதுமக்களின் பராதீனப்படுத்த முடியாத இந்த உரிமையை சுயாதீனமான உரையாடல்கள் மூலமும் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமைகளை வழங்குவதன் மூலமுமே நிறைவு செய்யமுடியும். "தேசியப் பாதுகாப்பு" என்ற பெயரில் உண்மைகளை மறைத்து பிரசாரங்களை ஊக்குவிக்கும் தணிக்கை மூலம் அதனை நிறைவு செய்ய முடியாது. என்று தெரிவித்துள்ளார்.

(உ)

---

# தேர்தலில் போட்டியிடவில்லை; லங்காநேசன் அறிக்கை

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளராகத் தாம் போட்டியிடவில்லையென்றும் எந்தவொரு தேர்தல் வேட்பாளர் நியமனப் பத்திரத்திலும் தாம் கையொப்பமிடவில்லையென்றும் -

துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் த.லங்காநேசன் அறிவித்துள்ளார்.

"வேட்பாளர் பட்டியலில் அமைச்சுச் செயலாளர்களும்!" என்ற தலைப்பில் 05.09.2000 ஆம் திகதிய உதயனில் வெளிவந்த செய்தி குறித்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருப்பதாவது.

2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதியன்று நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளர் பட்டியலில் எனது பெயராகிய தம்பையா லங்காநேசன் என்ற பெயரும் உண்டு என்பதை பத்திரிகைகள் மூலம் அறிந்தேன்.

அதனில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தம்பையா லங்காநேசன் என்பது நானல்லன் என்பதை எல்லோருக்கும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கும் அறியத் தருவது எனது கடமையாகும்.

அரசாங்க சேவையில் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தராகக் கடமைபுரியும் எனக்கு அரசியலில் ஈடுபட எந்த உரிமையுமில்லை என்பதை நான் நன்கு அறிவேன் என்பதுடன் இதனைப் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

மேலும் வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் கொடுக்கும் காலப் பகுதியில் நான் இலங்கையில் இருக்கவில்லை. 2000 ஓகஸ்ட் 24 ஆம் திகதி அன்று தொடக்கம் செப்ரெம்பர் 9 ஆம் திகதி சனிக்கிழமை வரையும் நான் அரசாங்கக் கடமையின் நிமித்தம் வெளிநாடு ஒன்றில் இருந்துள்ளேன். அத்துடன் எந்தவொரு தேர்தல் வேட்பாளர் நியமனப் பத்திரத்திலும் ஒருபோதும் நான் கையொப்பமிடவில்லை என்பதையும் திட்டவட்டமாக அறியத் தரக் கடமைப்பட்டுள்ளேன்.

நான் தொடர்ந்தும் துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகக் கடமை புரிந்து வருகின்றேன் - என்று உள்ளது. (அ)

### மட்டக்களப்பில் பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவன் மகாலிங்கம் சந்திரமோகனை விடுவிக்கக் கோரி மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நேற்று முன்தினம் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

---

# திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய செயற்பாடுகள் ஸ்தம்பிக்கும் நிலை

## பயிற்சி நெறிக்கான விண்ணப்பப் படிவங்கள் கூட வரவில்லை

யாழ்ப்பாணம்,செப்.13

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அதன் இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

அடுத்த ஆண்டில் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில், பயிற்சிநெறிகளுக்கான புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் இதுவரை இங்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனால் அடுத்த ஆண்டில், ஆரம்பிக்கப்பட வேண்டிய முகாமைத்துவ டிப்ளோமா, சட்டமானி, சிறுவணிக முகாமைத்துவம், இயந்திரவியல் டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளைத் தொடரமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இரண்டாயிரமாம் ஆண்டில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்குப் பதிவுகளை மேற்கொண்ட 93 மாணவர்களுக்கான கற்கைச் செயற்பாடுகள் இந்தவருடம் நடைபெறாது என இலங்கை திறந்த பல்கலைக்கழக நடவடிக்கைப் பணிப்பாளர் என்.ஜெயசிங்க கொழும்பிலிருந்து அறிவித்துள்ளார்.

அத்துடன் பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்குப் பதிவுகளை மேற்கொண்ட மாணவர்கள் விரும்பினால் அடுத்த கல்வியாண்டுடன் இணைந்து தமது கற்றல் செயற்பாடுகளைத் தொடரலாம் என்றும்-

அடுத்த ஆண்டில் பயிற்சியைத் தொடர விரும்பாத மாணவர்கள் தமது பதிவுக் கட்டணங்களை மீளப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் -

ஜெயசிங்கா தெரிவித்துள்ளார்.

அத்துடன் பதிவு செய்த மாணவர்களுக்கு இது தொடர்பான அறிவித்தல் கடிதங்களும் தம்மால் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவரால் தெரிவிக்கப்பட்டது.

அவரின் இத்தகைய அறிவித்தலானது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தின் செயற்பாடுகளைப் படிப்படியாகக் குறைத்து, ஒரு காலகட்டத்தில் அதை இங்கு இயங்காது செய்வதாகவே அமைந்துள்ளது.

இப்படி இயக்குநர் மேலும் தெரிவித்தார். (இ-9-ரி)

---


# உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக ஜேர்மனியில் ஆர்ப்பாட்டப் பேரணி

பொன்,செப்.13

ஜேர்மனியில் இருந்து நாடு கடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள 4 இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நேற்று முன்தினம் ஜேர்மனின் ஹனோவர் நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

'பிறேமன் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின்" ஆதரவில் நடத்தப்பட்ட இந்தப் பேரணியில் இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் மற்றும் ஜேர்மனியர் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நாகராஜா ராஜகாந்தன் (வயது-24), சோமசுந்தரம் சுந்தரலிங்கம்(வயது-31), பொன்னையா குலசிங்கம (வயது28), தம்பிராசா நடனேஸ்வரன் (வயது34) ஆகிய நால்வரும் கடந்த 8 நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளமை தெரிந்ததே.(இ-7)



கோப்பாய் தெற்கு, இருபாலை ஸ்ரீ பாலராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் அண்மையில் விக்னேஸ்வரப் பெருமான் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஆலய குருவான சோ.சுவேந்திரசர்மா கும்பம் ஏற்றி வருவதையும் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயகர் சிலையையும் படத்தில் காணலாம். (ஐ-10)

## பவளவிழா

அச்சுவேலி,செப்.13

அச்சுவேலி நாவலம்பதி காட்டு மலைக் கந்தசாமி கோயில் பிரதம குரு சீ.சிவகுருஜயர் அவர்களின் பவளவிழா எதிர்வரும் வெள்ளிக் கிழமை கலாநிதி சனசமூக நிலை முன்றலில் நடைபெறும்.(இ-173-11)

## பதவி உயர்வுக் கடிதங்கள்

திருகோணமலை,செப்.13

சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் அதிபர் சேவையில் பதவிஉயர்வு பெறுவது தொடர்பான நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய வர்களுக்குப் பதவி உயர்வுக்கடிதங் கள் அனுப்பிவைக்கும் பணி ஆரம் பிக்கப்பட்டுள்ளது என்று கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலா ளர் எம்.டி.பந்துசேன தெரிவித்துள் ளார்.

அண்மையில் தன்னைச் சந் தித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களிடம் அவர் இத னைத் தெரிவித்தார்.

கடந்த வாரம் நூற்றுக்கு மேற் பட்டோருக்கு இந்தக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன என்றும் -

இந்த மாத முடிவுக்குள் ஏனை யோருக்கான கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டுவிடும் எனவும் - எம்.டி. பந்துசேன மேலும் தெரிவித்துள் ளார். (இ-7)


வலி.கிழக்கு தென்பகுதி
பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், நீர்வேலி.

### அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும்,

**அங்கத்துவப்பட்டியல் முடிவுறுத்தல்- 30-09-2000**

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல்களை நடத்துவதற்காக சகல கிளைகளிலும் உள்ள அங்கத்துவ இடாப்புக்கள் 30-09-2000 உடன் முடிவுறுத்தப்படவுள்ளன என்பதனை அறியத்தருகின்றோம். ஒரு முழுப்பங்கின் பெறுமதி ரூபா நூறு(100/=)ஆகும். எனவே முழு அங்கத் துவ பங்குப் பணத்தைக் கொண்டிராத அங்கத்தவர்களிடமிருந்து மீதி பங்குப்பணம் 30-09-2000 வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதனை அறி யத்தருகின்றோம். கிளை நிலையங்களில் அல்லது தலைமைக் காரியா லயத்தில் பங்குப் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

**முக்கிய கவனிப்பு:-**

**30-09-2000இற்கு பின்னர் செலுத்தப்படும் பங்குப்பணங் களுக்குரிய அங்கத்தவர்களது பெயர்கள் கிளைக்குழுத் தேர் தலுக்குரிய அங்கத்துவப்பட்டியலில் இடம்பெற மாட்டாது என்பத னையும், எதிர்வரும் கிளைக்குழுத் தேர்தல் 30-09-2000இல் உள்ள அங்கத்தவர் பட்டியலின் படி நடைபெறும் என்பதனையும் தெரி வித்துக் கொள்கின்றோம்.**

அ.க.த.கிருஷ்ணராசா
தலைவர்.

செ.யோகேஸ்வரநாதன்
பதில் செயலாளர்

நீர்வேலி
2000-09-11

(C/12906)


## கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் கலந்துரையாடல்

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் கள் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள் ளது.

15,17 வயதுக்குட்பட்ட பாட சாலை கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களுக்கு மத்தி யஸ்தம் வகித்தல் மற்றும் விதிமு றைகள் தொடர்பான பல விடயங் கள் இக்கலந்துரையாடலில் ஆரா யப்படவுள்ளதால் அனைத்து மத்தி யஸ்தர்களும் கலந்து கொண்டு ஒத் துழைக்குமாறு சங்கச் செயலாளர் சு.சிறீகாந்தன் கேட்டுள்ளார். (ஐ)


உ

மணக்கோலம் பூணும் மணமக்களை

மனதார வாழ்த்துகின்றோம்

நாளை (14-09-2000) வியாழக்கிழமை மணவாழ்வில் இணையும்

திருநிறை செல்வன்
ஸ்ரீதர்
(கூட்டுறவுப் பதிப்பகம்/யாழ். ப. நோ. கூ.ச.)

திருநிறை செல்வி
சிவாஜினி
(உணவுக் கட்டுப்பாட்டுக்கிளை/கச்சேரி)

தம்பதியினரை
"ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி சால்பே தலை நிற்கும் சற்குணராய்"
காலம் முழுவதும் சகல இன்பங்களும் பெற்று ஞாலமதில் புகழோடு வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

(78328) மணமகனின் நண்பர்கள் நந்தன், குமரன், மதன், சிவாஸ்கரன்.



உ
சிவமயம்

### பூப்பு மங்கள திருமஞ்சள் நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணித் திங்கள் 30 ஆம் நாள் (15-09-2000) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் 8.30 மணி வரையுள்ள சுப வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி
திருவளர் செல்வி கிருசாந்தினி அவர்களுக்கு

பூப்பு மங்கள திருமஞ்சள் நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்பான வரவை நாடும்

திரு. இ. சிவசுப்பிரமணியம் (சிவம்)
நிரந்தர முகவரி
பெரிய பளை., பளை.

தற்காலிக முகவரி
MS. சுப்பிரமணியம் (மகான்)
C/o திரு.திருமதி இ.சிவசுப்பிரமணியம்
வதிரிச்சந்தி வதிரி, கரவெட்டி.

குறிப்பு: இடம்பெயர்ந்து இருப்பதால் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். (78261)


## மக்கள் முகம்



சங்குவேலி தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மானிப்பாய் மேற்கு, கட்டுடையை வசிப்பிடமாகக் கொண்டவருமான இராசேந்திரம் லோகேந்திரராஜா அகில இலங்கை சமாதான நீதிவா னாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி பி.சுப்பிரமணியம் முன்னிலையில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் சத் தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் ஓய்வு பெற்ற உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டரும், சங்குவேலி தமிழ் கலவன் பாடசாலை, மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், சங்குவேலி தெற்கு இந்து வாலிபர் சங்கம், இளைஞர் விவசாயக் கழகம் ஆகியவற்றின் முன்னாள் செயலாளரும், மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய உறுப்பினரும், மானிப்பாய் ப.நோ.கூட்டுறவுச்சங்கக் கிளை 12 இன் தலைவரும் சமூக சேவை யாளருமாவார். (ஐ-3)

▲ ▲ ▲ ▲ ▲

தீவக லயன்ஸ் கழகத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப் பட்டுள்ளது. இதன் புதிய தலைவராக வைத்திய கலாநிதியும் சமாதான நீதிவானுமான க. இராஜரட்ணமும் செயலாளராக த.தேவராசனும் பொருளாளராக எஸ்.நித்தியானந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். இவர் கள் மாவட்டத் தலைவர் பரநிருபசிங்கம் முன்னிலையில் பதவிப் பிர மாணம் செய்து கொண்டனர். (க-ரி)

▲ ▲ ▲ ▲ ▲

மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ் தானத்தின் பரிபாலனசபைத் தலைவராக செ. சிவலோகநாதனும், செயலாளராக தெ. விஜயசங்கரும் உப தலைவராக இ. யோகேஸ் வரனும் உப செயலாளராக த.குணநாயகமும் பொருளாளராக தி.விவே கானந்தராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் பன்னிரெண்டு பேர்கள் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (க-111)

▲ ▲ ▲ ▲ ▲



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பவளவிழா நிகழ்வுகள் இம்மாதம் 2 ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவையொட்டி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கலை கலா சாரப் போட்டிகளில் கர்நாடக இசை (வாய்ப்பாட்டு), மிருதங்கம் ஆகிய இரண்டு துறைகளிலும் யாழ்ப் பாணம் திருநெல்வேலி கிழக்கு, செங்குந்த வீதியைச் சேர்ந்த செல்வன் சிவானந்தன் - அகிலன் முதலாம் இடங்களைப் பெற்று தலா பத்தாயிரம் ரூபா பணப் பரிசுடன் இரண்டு தங்கக் கேடயங்களையும் பரிசாகப் பெற்றுக் கொண் டார். யாழ். பரியோவான் கல்லூரியின் மாணவனாகிய இவர் சங்கீதபூ ஷணம் எல். திலகநாயகம் போல், சங்கீதபூஷணம் எஸ்.சிவஞானசேக ரம் ஆகியோரிடம் கர்நாடக இசையையும், கலாவித்தகர் கே.கண்ணதாச னிடம் மிருதங்கத்தையும், இசைஞானபூபதி ஆர்.எஸ். கேசவமூர்த்தி அவர்களிடம் வயலினையும் சாஸ்திரீய முறைப்படி பயின்றவர் ஆவார். இவர் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட, மாகாண போட்டிகள் பலவற்றில் பங்குபற்றி முதல் இடங்களைப் பெற்ற தோடல் லாமல் இசைநிகழ்ச்சிகளையும் நடத்திப் பலரது பாராட்டுதல்களையும் பெற்றவர். (ஐ)

▲ ▲ ▲ ▲ ▲

வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரிச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் பொது முகாமையாளர் க. கணபதிப்பிள்ளை தலை மையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் நலன்புரிச் சங் கத் தலைவராக பா. சித்திரவடிவேலும் செயலாளராக ந. சசிகரனும் பொருளாளராக திருமதி அ.சகிதாதேவியும் தெரிவு செய்யப்பட்டனர். (க-167)

▲ ▲ ▲ ▲ ▲

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் ஒலிபரப்புச் சேவையினால் நடத்தப்பட்ட பவளவிழாச் சிறுகதைப் போட்டியில் செல்வி பிரேமினி சபாரத்தினம் எழுதிய 'மழை' என்னும் சிறுகதை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தச் சிறுகதையை எழுதிய செல்வி பிரேமினி சபாரத்தினம் 'உதயன்' - 'சஞ்சீவியில்' பல சிறுகதைகளையும் கவிதைகளையும் தாட்சாயினி என்ற பெயரில் எழுதி வாசகர்களுக்கு மிகவும் பரிச்ச யமானவர்.

பெரிய அரசடிவீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சொந்த முக வரியாகக் கொண்ட இவர் யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட இறுதியாண்டு மாணவியாவார்

பல சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ள இவருக்கு தங்கப்பதக்கங்கள் உட்பட பரிசுகளும் சிறப்புப் பரிசுகளும் கிடைத் துள்ளன. (ஐ-10)

▲ ▲ ▲ ▲ ▲



மின்சாரநிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பா ணத்தைப் பிறப்பிடமாகவும், அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பூலோகரட்ணம் இலங்கைத்தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக அண்மை யில் யாழ் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண் டார்.

இவர் யாழ். மாநகரசபை உத்தியோகத்தரும் சிறந்த சமூக சேவையாளரும் ஆவார். (ஐ-173)


என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்
(ஏசாயா - 40:1)

கர்த்தரின் பரிசுத்த ஆசாரியர்களே!
ஒன்று கூடுங்கள்

ஊழியர்களுக்கான பரிசுத்த உபவாச ஜெபம்

இடம்: சீயோன் தேவாலயம்
24, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
காலம்: 15-09-2000 வெள்ளிக்கிழமை
நேரம்: முற்பகல் 9.30 - பிற்பகல் 1.30 (புதிய நேரம்)

❖ திருமணமானவர்கள் மனைவிமாரை அழைத்து வாருங்கள்.

சங்கீதம் 144: 14-15

ஜெப இணைப்பாளர்:
இலங்கைச் சுவிசேஷக ஐக்கியத்துவம் (LEASL)
(78333)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சுப்பிரமணியநாதன்

(ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சரசாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியநாதன் நேற்று (12—09—2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் இராசநாதன், நேசநாதன், ரஞ்சினி, ரஞ்சநாதன், ரமணி ஆகியோரின் அன்புத் தந்தையும் நயனா, கலைச்செல்வி, முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13-09-2000) புதன்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வதிரியில் உள்ள ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. நேசநாதன்
(மகன்)

தற்காலிக முகவரி:-
புதுக்கிணத்தடி,
வதிரி,
கரவெட்டி.

(78339)

## கந்தையா சிவஞானம்

காரைநகர், பொன்னம்பலம் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சண்முகம் கந்தையாவின் மகன் க. சிவஞானம் (சிறி சிதம்பரேஸ்வரா சிவகாமி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தர், முன்னாள் கட்டட ஒப்பந்தக்காரர், வவுனியா சிவஞானம் கமம் உரிமையாளர், வவுனியா), அவர்கள் திங்கட்கிழமை 11-09-2000 காலமானார்.

இவர் தையல்நாயகியின் அன்புக் கணவரும், சி. சிவபாலன் (லண்டன்), சி. சிவநேசன் (I C. R. C. வவுனியா), சி. சிவயோகர் (கனடா), சி. சிவபாதம் (அமெரிக்கா), சி. சிவசோதி (கனடா), சி. சிவநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவனேஸ்வரி, பிறேமா, கேதீஸ்வரி, சிவயோகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சாம்பலோடை மயானத்தில் நேற்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தையல்நாயகி சிவஞானம்
(மனைவி)

பொன்னம்பலம் வீதி,
காரைநகர்.

(சி/1292)

## பொன்னம்பலம் இராஜகுலசேகரம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான பொன்னம்பலம் இராஜகுலசேகரம் நேற்று (12- 09- 2000) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் திருமதி லக்சுமி பொன்னம்பலம் ஆகியோரின் மூத்த மகனும், மங்கையர்க்கரசியின் பாசமிகு கணவரும், தர்சினியின் அருமைத் தந்தையாரும், யோகராணி, புஷ்பராணி, காலஞ்சென்ற தர்மகுலசேகரம் மற்றும் சந்திரகுலசேகரம், ஞானகுலசேகரம் (லண்டன்), சந்திரபவானி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நகுலபாஸ்கரன் (லண்டன்), தயாநிதி (சந்திரா ஸ்ரோர்ஸ், ஆனைக்கோட்டை), தனபாலசிங்கம் (லண்டன்), திருச்செல்வி (ஆசிரியை, வட்டு. இந்துக்கல்லூரி), சரஸ்வதி, யசோதினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-09-2000) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
திருமதி லக்சுமி பொன்னம்பலம் (தாய்)
திருமதி ம. இராஜகுலசேகரம்

P3, அன்ரூசன் பிளாற்ஸ்.
நாரசென்பிற்ற,
கொழும்பு 05.

(78346)

## டாக்டர் சுப்பிரமணியம் தியாகராசா

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட டாக்டர் சுப்பிரமணியம் தியாகராசா அவர்கள் நேற்று (12-09-2000) செவ்வாய்க்கிழமை. காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம்-இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜபூபதியின் அன்புக் கணவரும் பாலமுரளி (தொழில் நுட்பக் கல்லூரி மாணவன்), பாலேஸ்வரன், ரஜீவன், சயந்தினி (ப. ம. கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, சண்முகநாதன், கந்தராசா (பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-09-2000) அவரது இல்லத்தில் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் விளாவெளி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
S. சுந்தரராசா (சகோதரர்)
தி. பாலமுரளி (மகன்)

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(78356)

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், செப் 13

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவமுகாம் இன்று புதன் கிழமை காலை 9 மணி முதல் சாவற்கட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இடம்பெறும்.

இம் முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம், மலேரியா நோய் போன்றவற்றுக்கான பரிசோதனைகள் இடம் பெறவுள்ளன.

கண் பரிசோதனையை எஸ். எம். பௌர்ணாந்து நிறுவனத்தினரும் பொது மருத்துவப் பரிசோதனையை சிரேஷ்ட டாக்டர்களுடன் இணைந்து மருத்துவ பீட மாணவர்களும் மேற்கொள்வர். வசதி குறைந்தோருக்கு மூக்குக் கண்ணாடி வழங்குவதற்கான ஒழுங்குகள் லயன்ஸ் கழகத்தால் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

★ ★ ★

மானிப்பாய் சமூக சுகாதார சுற்றாடல் விவகார சபையினால் ஒவ்வொரு பௌர்ணமி தினமும் மானிப்பாய் மெடிக்கிளினிக்கில் நீரிழிவு, உயர் இரத்த அழுக்கம் போன்றவற்றுக்கான இலவச மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தொடரின் இரண்டாவது நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பகல் 12 மணி வரை நடைபெறும். (க-152)

★ ★ ★

சுன்னாகம், சாவகச்சேரி லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் மருத்துவ முகாம் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறும்.

இம்முகாமில் சலரோகம், இரத்தஅழுத்தம், கண் ஆகிய பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

பரிசோதனைகளை டாக்டர்கள் வி. யோகேஸ்வரன், கே. சிவராஜா ஆகியோர் மேற்கொள்வர்.

பன்னாலை, அளவெட்டி கிழக்கு, கணேஸ்வரம் ஆகிய கிராம அலுவலர் பகுதிகளில் வசிப்போரை இந்த முகாமில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. [க]

# கலந்துரையாடல்

குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் மேற்படி தொழிற்சாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊழியர்களின் நிலை குறித்தும், தொழிற்சாலையின் செயற்பாடு குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது. (க-51)

★ ★ ★

யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுச்சபை முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் இரா. தயாகரன் கேட்டுள்ளார். (க-180)

# கட்டுரைப் போட்டி

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பவளவிழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

"இருபத்தோராம் நூற்றாண்டில் வட்டு. மத்திய கல்லூரி" என்ற தலைப்பில் இத்தக் கட்டுரைப்போட்டி நடத்தப்படவுள்ளதாகப் போட்டி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (இ-9)

# தேசிய வழிகாட்டல் வாரம்

பாடசாலையில் கல்விகற்று வெளியேறும் மாணவர்களின் வேலைவாய்ப்பைக் கருத்தில் கொண்டு "பாடசாலையில் இருந்து வேலை உலகுக்கு தேசிய வழிகாட்டல்" வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது

இம்மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரையும் ஒருவாரம் வழிகாட்டல் வாரமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண, உயர்தர வகுப்புகளில் கல்விகற்று வெளியேறும் மாணவர்களின் தொழில் வாய்ப்புக்கு வழிகாட்டும் நோக்கில் பாடசாலை அபிவிருத்தி வழிகாட்டல் ஆலோசனைப்பிரிவு, வழிகாட்டல் வாரம் தொடர்பான சுற்றறிக்கையை பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்துள்ளது. (இ-11)

# மஹாளய காலம் நாளை ஆரம்பம்

பிதிர்க் கடன் தர்ப்பணம் செய்வதற்கான மஹாளயக் காலம் நாளை வியாழக் கிழமை ஆரம்பமாகிறது.

நாளை தொடக்கம் இம் மாதம் 27 ஆம் திகதி வரையான இந்த 14 நாள் காலத்திலும் சைவமக்கள் இவ்வுலக வாழ்வை நீத்த தமது உறவினருக்காக வீடுகளில் ஆத்ம சாந்திபிரார்த்தனையும் தர்ப்பணமும் செய்வது வழக்கம்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா பாக்கியம்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா பாக்கியம் நேற்றுக் (12-09-2000) காலமானார்.

அன்னார் பொன்னையாவின் அன்பு மனைவியும் மகேந்திரம் மனோண்மணி, சிவரத்தினம், குணலிங்கம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பூதப்பிள்ளை, கமலாம்பிகை, இராசபவானி, இராசாத்தி, கௌரி ஆகியோரின் மாமியாரும், தர்மலிங்கம், திருநாவுக்கரசு, அன்னம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13 9-2000) காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. செல்வரத்தினம்
(ஜெயந்தன்)

ஞானவயிரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(78348)

## பாக்கியநாதன் ஞானப்பிரகாசம்

(ஞானி)

(முன்னாள் வர்த்தகர்)

உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியநாதன் ஞானப்பிரகாசம் (ஞானி) நேற்று (12-09--2000) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் சலோமை ஆகியோரின் அன்பு மகனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், இராசம்மா, திரவியம், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மேரிகொன்சலா (ஜேர்மனி), ஜோண்பிரதாபன் (உரும்பிராய்), இயேசுஜீவகன் (ஜேர்மனி). விமலாதேவி (கொழும்பு), வசந்தலீலா (ஜேர்மனி), கீதா (ஜேர்மனி), றொபேட் (உரும்பிராய்), ஜெரோன் (ஜேர்மனி), ரஜிதா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (13-09-2000) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணிக்கு உரும்பிராய் புனிதமிக்கேல் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜோண்பிரதாபன்,
றொபேட்
(பிள்ளைகள்)

புனித மிக்கேல்ஆலய வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(78352)

## திருமதி
## சின்னையா பரமேஸ்வரி (ஈஸ்வரி)

கொக்குவில் கிழக்கு, குளப்பிட்டியைச் சேர்ந்த திருமதி. சின்னையா பரமேஸ்வரி (ஈஸ்வரி) நேற்று (12-9-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையாவின் அன்பு மனைவியும், அரியதாஸ் (கனடா), வசந்தகுமாரி, ரஞ்சினி, மீனலோசினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி (கனடா), சிவபாலன், சண்முகராசா, குகதாஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கார்த்திகா. அனித்தா (கனடா), சபிதா, கோபிகிருஷ்ணா, புருஷோத்தமன், வித்தியாகரி, குகப்பிரியா (கனடா), ஆகியோரின் பேத்தியும், காலஞ்சென்ற சந்திரா, மற்றும் பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா-அழகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் தம்பிஐயா-இராசம்மா தம்பதியரின் மருமகளும் நல்லம்மா, பொன்னம்பலம், சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(13-9-2000) புதன்கிழமை அவரது இல்லத்தில் பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவர்

குளப்பிட்டி,
கொக்குவில் கிழக்கு.

(78345)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இசைவகுப்புகள்

ஓகன் (கீபோட்) மிருதங்கம் ஆகியவற்றுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. தொடர்பு: ஏ. எஸ்.ரஞ்சித், பழைய பொலீஸ் நிலையம், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

(78195)

## இறைச்சிக்கோழி

சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். 1. 31 மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு), 2. பொன்னாலை வீதி, மானிப்பாய். (விதானை வளவு).

(78031)

இறைச்சிக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். உடன்தொடர்புகளுக்கு: இல. 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (78288)

## சனீஸ்வர மாற்ற பலாபலன்கள்

வேலணை ஜோதிடர் திரு. V.A. சிவராசா வெளியிட்ட சனீஸ்வர வக்கிரகம், சனீஸ்வர மாற்றப் பலாபலன்கள் என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் விற்பனையாகின்றது. உங்கள் எதிர்காலம் பற்றிய கனவை முன்கூட்டியே அறிந்து கொள்ள இல.152B, அரசடி வீதி, கந்தர்மடம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

(78311)

## O/L ENGLISH MODEL PAPER

மாணவர்களுக்கு நிச்சயம் உதவியாயிருக்கும். யாழ்ப்பாணம் பூபாலசிங்கம், மானிப்பாய் நாயக பாலன் உட்பட எங்கும் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூபா12/- ஆசிரியர் K. சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.

(78300)

## தவறிவிட்டது

06-09-2000 புதன்கிழமை காலை வட்டுக்கோட்டையிலிருந்து செல்வச்சந்நிதி கோயில் செல்லும் வழிக்குள் சிறுவருக்குரித்தான தங்கக் கைச்சங்கிலி ஒன்று தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பொ.இராஜேஸ்வரன், ஊர்மிளா போட்டோ, கல்வியங்காடு எனும் முகவரியிலோ அல்லது மணியம் மடம் செல்வச்சந்நிதி எனும் முகவரியிலோ ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (78331)

செல்வராஜா சின்னக்கிளி என்பவரது சங்கானை கிழக்கு, சங்கானை எனும் முகவரி கொண்ட தேசிய அ.அ. (இல.536872378x) உம், வட்டு கிழக்கு, சித்தன்கேணி எனும் முகவரி கொண்ட விசேட அ.அட்டையும் 30-08-2000 அன்று யாழ்ப்பாணத்துக்கும் சித்தன்கேணிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒப்படைத்து உதவவும். (78326)

## விற்பனைக்கு

MD 90 மோட்டார் சைக்கிள், HA-2-90 மோட்டார் சைக்கிள், Sony 1982 கலர் T.V., National 17" Black & White T.V., உஷா குளிர்சாதனப்பெட்டி, LG டெக், மகாராஜா செற்றி, டைனிங் ரேபிள் மற்றும் பல வீட்டு உபயோகத்துக்குரிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- திரு. P. குகதாசன், ஐயனார் வீதி, சண்டிலிப்பாய். (78301)

## விற்பனைக்கு

12 அங்குலப் பலகை சீவக்கூடிய மெசின், 10 அங்குல கனம் கட்டி சீவக்கூடிய கடைச்சல் மெசின் விற்பனைக்குண்டு (ஊசிலி எஞ்சின்) தொடர்பு:- க. சிவப்பிரகாசம், மானிப்பாய் பெற்றோல் செற் முன் ஒழுங்கை.

(78316)

## விற்பனைக்கு

HERO HONDA CD 100 SS உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 67, செட்டித்தெரு, நல்லூர். (78335)

புதிய நியூஸ்மேட் யமகா (V-50) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 7, திருக்குமரன் (வீணைவேணு) வழக்கம்பரை வீதி, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

(78315)

## நீர் கொழும்பை அதிர வைத்த சத்தம்

கட்டுநாயக்கா மற்றும் சீதுவைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை காலை கேட்ட பாரிய மர்மச் சத்தம் குறித்து சீதுவை பொலீஸார் தொடர்ந்தும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

காலை 8 மணியளவில் கேட்ட இந்தச் சத்தத்தால் பல பகுதிகள் அதிர்ந்ததுடன் நீர்கொழும்பிலும் இந்தச் சத்தத்தின் பாதிப்புகள் ஏற்பட்டன.

இந்த மர்மச் சத்தம் குறித்து மேற்படி பகுதிகளில் மக்கள் மத்தியில் பல்வேறு ஊகங்கள் நிலவிய போதும் இதுவரை அந்தச் சத்தம் குறித்து எதுவித தகவலும் வெளியாகவில்லை.

சீதுவைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பமுனுகம இது பற்றிக் கூறுகையில் இந்தச் சத்தத்தை, தானும் கேட்டதாகவும் எனினும் தரையில் எங்கேயாவது குண்டு வெடித்ததற்கான அறிகுறிகள் தென்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இதே நேரம் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்கு குண்டுத்தாக்குதலை நடத்தச் செல்லும் 'சுப்பசொனிக்' ரக கிபிர் மற்றும் மிக் - 27 ரக விமானங்கள் மிக வேகமாகப் புறப்படும் போது அமுக்க வித்தியாசத்தில் இவ்வாறான பாரிய சத்தம் ஏற்படும் வாய்ப்புக்கள் இருப்பதாக விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-6)

## இன்று சமய தீட்சை

யாழ்ப்பாணம், செப். 13

தும்பளை தெற்கு நாவலடி ஸ்ரீ சத்தியம்மன் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு சைவச்சிறுவர்களுக்கு சமய தீட்சை வழங்கப்படவுள்ளது.

அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந்த நிகழ்வில் சைவ சிந்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜா குருக்கள் தீட்சையினை வழங்குவார்.(க)

## பாடசாலைகள் இணைவு

தென்மராட்சி செப். 13

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சோரன்பற்று கணேசா வித்தியாலயம் யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்துடன் இணைந்து காலை நேரப் பாடசாலையாகவும் -

வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை நாகர் கோவில் மகா வித்தியாலயத்துடன் இணைந்து தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாகவும் - எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இயங்கவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(க-117)


மத்திய கல்வி நிலையம்
(C.T.C)
நீர்வேலி கந்தசாமி கோயிலடி.

A/L DAY CLASS

ஆரம்பம்: 15-09-2K.

* பொருளியல்
M. விக்கி.
* கணக்கியல்
S. கொலின்ஸ்.

2001,2002 ஆம் ஆண்டுக்கான கலை, வர்த்தக வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(78291)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 27 - 06 - 1930



உதிர்வு 14 - 08 - 2000

அமரர்

### கிருஷ்ணபிள்ளை கோவிந்தபிள்ளை

(ஓய்வு பெற்ற உதவிக் கணக்காளர், இலங்கை மின்சாரசபை)

**துன்பங்கள் எவை வரினும் துடைத்தொழித்துக் காப்பாற்றும்**
**அன்புள்ளம் கொள் அப்பா இருக்கின்றார் எனமகிழ**
**வன்புள்ள கொடிய விதி மருவி நின்று மாய்த்ததுவே!**
**என்புருக நின்மறைவை எண்ணியழு கின்றோமே!**

எமது குடும்பத் தலைவர் சிவபதம் எய்திய துயரச் செய்தி அறிந்து, எமது துன்பத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபச் செய்தி அனுப்பியோர், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று 13-09-2000 எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*சாஸ்திரியார் வீதி,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.*

(78175)


விற்பனைக்கு

யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட

* YAMAHA V 90
* MATE (Newsmate) YCLS 50

மோட்டார் சயிக்கிள்கள் குறைந்த விலையில் மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

ஈஸ்வர பகவான் அன் கம்பனி.
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(78273) தொ. பே. எண்-2350


## கண்ணீர் அஞ்சலி

இலக்கண வித்தகர், செந்தமிழ்த்திலகம்,
மகாவித்துவான், மூதறிஞர்,

### பண்டிதர் இ. நமசிவாயம்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழந்த கவலை அடைகின்றோம். தமிழ் கூறும் நல்லுலகம் தலைசிறந்த தமிழ்ப் பேராசானை இழநது விட்டது. எமது சங்கம் முன்னாள் நெறியாளர் குழு உறுப்பினரான சிறந்த கூட்டுறவாளனை இழந்து நிற்கிறது.

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கும், சுற்றத்தவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*தெல்லிப்பழை.*

**தலைவர், பணிப்பாளர், பணியாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.**

(C/12907)

## 31 ஆம் நாள் நினைவில் கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன பாலர் பாடசாலை ஆசிரியை
செல்வி ம. ஜெயலதா
அவர்களின் அன்புத் தந்தையாரான

### அமரர் கி.மனுவேற்பிள்ளை

அவர்களின் பூவுலகப் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ரலன்ற் இன்ஸ்ரிரியூட்**
ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.

*அரசடி,*
*கரவெட்டி.*

(78308)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சின்னம்மா அம்மையார்

தோற்றம் 1920 - 03 - 22

மறைவு 2000 - 08 - 14

குடும்பத் தலைவியாயும்
வழிகாட்டியாயும் அமைந்து
எம்மை எல்லாம் வாழ்வித்த
எங்கள் அன்னையாரை
அன்புடனும் வாஞ்சையுடனும்
நினைவு கூர்ந்து வணங்குகின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*அன்னை இல்லம்,*
*உரும்பிராய் கிழக்கு.*

(78307)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது வித்தியாலய உப அதிபர்

திரு. பாலு திலகராசா

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற தையிட்டு மகிழ்ச்சி அடைவதுடன் சிறந்த சமூகத் தொண்டனாக விளங்க வேண்டுமென வாழ்த்தி நிற்கும்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.

(78353)



We Serve

# நல்லூர் லயன்ஸ் கழகம்

**இலவச கணனிப்பயிற்சி (06 மாதங்கள்)**

வறுமைக் கோட்டுக்கு கீழ்ப்பட்ட, வன்செயல், யுத்த அனர்த்தங்களால் பெற்றோரை இழந்த, க.பொ.த.(உ/த) வரை கல்வி கற்ற 25மாணவ, மாணவியர்களுக்கு, நல்லூர் லயன்ஸ் கழகம் தமது 2000/2001 ஆண்டு கல்விச் சேவைச் செயல்திட்டத்தின் மூலம், யாழ். முன்னணி கணனி நிறுவனத்தில் பயிற்சி வழங்கவுள்ளது. பயன்பெற விரும்புவோர், தலைமையாசிரியர்/கிராமசேவையாளர்/பிரதேச செயலர் ஆகிய மூவரின் உறுதிப்படுத்தலுடனும், மற்றும் தகுந்த ஆதாரங்களுடனும் ***18-09-2000க்கு முன் செயலாளர், நல்லூர் லயன்ஸ் கழகம், 144, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*** என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

K.ஜெயரட்ணம்
*தலைவர்*

R.இராஜகுலேந்திரன்
*செயலாளர்*

(C/12908)



# தொழில் நுட்பக் கல்லூரி

**இறுதிப்பரீட்சை - 2000 டிசெம்பர்**

இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரிகளின் இறுதிப்பரீட்சைகள் 2000 டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளன.

பகல் நேர, மாலை நேர பயிற்சிகளின் இறுதி ஆண்டு மாணவர்களும், முன்னர் நூனசித்தி பெற்ற மாணவர்களும் தங்கள் விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தி, வங்கியில் உரிய பணத்தொகையைச் செலுத்திய பற்றுச்சீட்டுடன் **20-09-2000 (புதன்கிழமை)**க்கு முன்னர் கல்லூரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

சு.செந்தில்நாதன்
அதிபர்.

(13-09-2000)

(C/12909)


# முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

தென்மராட்சி,செப்.13

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் நூலக அபிவிருத்தி அலுவலர்களாக கடந்த வருடம் நியமனம்பெற்ற பட்டதாரி பயிலுநர்களை முகாமைத்துவ உதவியாளர்களாக நிரந்தரப் பதவியில் அமர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை நெல்லியடியில் இயங்கும் வலய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் வலய அலுவலகத்தில் உள்ளதால் கீழ்க்காணும் பட்டதாரி பயிலுநர்களை நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். எஸ்.ராகினி (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), எஸ்.குணேஸ்வரி(கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), ஏ.றஜனி(மீசாலை வீரசிங்கம் ம.வி),என்.சிவாஜினி (மிருசுவில் அ.த.க.பாடசாலை), பீ.பிரியதர்சினி (மட்டுவில் சரஸ்வதி வித்தி.), கே.சுசீலாதேவி(வரணி ம.வி), ஏ.குலத்திலகம் (மறவன்புலோ சகலகலாவல்லி வித்தி.), என்.பாலசுப்பிரமணியம் (உசன் இராமநாதன் ம.வி), கே.ஸ்ரீசாந்தமலர்(நாவற்குழி ம.வி), கே.வதனகுமாரி (எழுதுமட்டுவாழ் கணேசா வித்தி.), என்.சுரேகா (கைதடி முத்துக்குமாரசாமி வித்தி.), கே.செல்வராணி (மீசாலை விக்னேஸ்வரா வித்தி.), ரீ.கோணேஸ்வரி (கச்சாய் அ.த.க.பா.), ரீ.அமுதஜோதி (கொடிகாமம் அ.த.க.பா.), கே.சுசீலாதேவி (விடத்தற்பளை கமலாசினி வித்தி.), கே.சுகுந்தன் (மாசார் அ.த.க.பா.), ரீ.நந்தினி (கைதடி விக்னேஸ்வரா வித்தி.), எம்.ஸ்ரீதங்கராசா (பளை மத்திய கல்லூரி), பொ.தயாபரி (வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பா.).

(க-117)

## விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம்,செப்.13

நெல்லியடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்றவரான நெல்லியடி வடக்கைச் சேர்ந்த ஐயாத்துரை அகிலன் (வயது 20) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைக்குட்படுத்திய நிலையிலே நேற்று அவர் உயிரிழந்தார். (இ-15-109-139)

## புலிகள் தரப்பில் உயிரிழப்பு

வவுனியா,செப்.13

கடந்த 10ஆம் திகதி திருகோணமலை,மொறவேவவில் படையினர் - பொலீஸ் கூட்டுப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்போது படுகாயமடைந்திருந்த மேஜர் கரிகாலன் (சண்முகராஜா ரஜனிகாந்த் - திருகோணமலை) என்பவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் தமது புலிகளின் குரல் வானொலி மூலம் அறிவித்தனர். (இ-8)

## ஊரடங்கை தளர்த்த கோரிக்கை

வடலியடைப்பு புதுானை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெறவுள்ள பூங்காவனத் திருவிழாவையொட்டி அங்கு கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால்-

அந்த ஆலயச்சுற்றாடலில் ஊரடங்கை தளர்த்துமாறு வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி. வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான என்.திரிலோகநாதன் படை அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

513 ஆவது படையணித் தளபதி கேணல் லால் பெரேராவிடம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக அவர் திரிலோகநாதனுக்கு அறிவித்துள்ளார்.(இ-க-3-10)


# தொடர்பு கொள்ளவும்

J/D - 90 -C/98002865
E-98026249 } A/S

J/D - 90 C/98002936
E-98026117 } B

**இலக்கத்துக்குரிய மோட்டார் சயிக்கிள் உரிமையாளர்கள் இவற்றுக்குரிய அத்தாட்சிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு**

***802/5, பலாலி, றோட், திருநெல்வேலி.***

**என்னும் முகவரியில் வந்து உடன் தொடர்பு கொள்ளவும்.**

(78336)



# தனி நடிப்புப் போட்டி
# குரும்பசிட்டி சன்மார்க்க சபை

(கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை நாடக வளர்ச்சி நிதி ஆதரவில் நடத்தும் தனி நடிப்புப் போட்டி)

★ 05 நிமிட நடிப்பு
★ பரிசுகள்:- 1ஆம் பரிசு - 500/=
2ஆம் பரிசு - 300/=
3ஆம் பரிசு - 200/=

தரமாக நடிக்கும் வேறு பதின்மருக்கு ரூபா - 1500/= பகிர்ந்தளிக்கப்படும்.

★ **விண்ணப்ப முடிவு திகதி :- 15.10.2000**

பெயர், முகவரி, நடிக்கும் பாத்திரப்பெயர், வயது என்பனவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பங்களை .

அமைப்பாளர்
ம.சபாரத்தினம்
வங்கியடி, இணுவில் கிழக்கு,
இணுவில்.

எனும் முகவரிக்கு அனுப்பவும். போட்டி நடைபெறும் இடம், திகதி கடிதமூலம் அறிவிக்கப்படும். அனைவரும் கடிதம் மூலமே தொடர்பு கொள்ளவும்.

**பாத்திரம்** :- ஷேக்ஷ்பியர் நாடக பாத்திரம் ஒன்று அல்லது தமிழ்க் காவிய பாத்திரம் ஒன்று.

(உதாரணம்) :- சீதை, மாதவி, குடிலன், சகுனி

★ யுத்த சூழ்நிலை காரணமாக கனிஷ்ட பிரிவுப் போட்டி தவிர்க்கப்பட்டுள்ளது.

**பொன் - பாலகுமார்,**
பொதுச் செயலாளர்,
சன்மார்க்க சபை.

(78327)



உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருஷம் ஆவணித் திங்கள் 28ஆம் நாளாகிய இன்று (13-09-2000) புதன்கிழமை காலை 9.33 முதல் 11.45 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்



எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**இலங்கநாதன் (நாதன்)**
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**கருணாவதி (கருணா)**
அவர்களுக்கும்

ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய ஆலய வள்ளி தெய்வானை மண்டபத்தில் திருமணம் நடைபெறப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**இருவீட்டார் அழைப்பு**

திரு.திருமதி அண்ணாமலை - சிவமணி
மகன் - சுந்தரலிங்கம்
அல்வாய்.

திருமதி சிவசுந்தரம் தங்கேஸ்வரி
சங்கானை
செல்வன் சிவசுந்தரம் சுதாகரன்
HOLLAND

(78329)



# நல்லூர் பிரதேச சபை
# நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் ஆதனவரி நிலுவைகள் அறவிடும் பொருட்டு நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

**மேற்படி பதவிக்கான தகைமைகள் :-**

1. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. 19 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
4. சிறந்த ஆரோக்கியமும் நல் நடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
5. நல்லூர் பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
6 தரகு அடிப்படையில் சேகரிக்கும் பணத்தின் 20% வீதம் வேதனமாக வழங்கப்படும்.
7. தெரிவு செய்யப்படுபவர் பிணை வைப்புப்பணமாக ரூபா 2000/= செலுத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு "தலைவர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி." என்ற முகவரிக்கு 25-09-2000 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

க.மணிபல்லவராஜன் ஜே.பி.யு.எம்.
தலைவர்
நல்லூர் பிரதேச சபை

(C/12913)



✳ போரை நிறுத்துங்கள்!

✳✳ புலிகள் இயக்கத்துடன் பேசுங்கள்!!

✳✳✳ தமிழ் இனத்தை தன்மானத்துடன் வாழவிடுங்கள்!!!

சட்டத்தரணி **ந.சிறீகாந்தா** தலைமையில்

போட்டியிடும் சுயேச்சைக்குழு - இல - 6



X

(78208)

# தபால் மூல வாக்களிப்பு 28 ஆம், 29ஆம் திகதிகளில்

கொழும்பு,செப்.13

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 28.ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 29.ஆம், 30.ஆம் திகதிகளில் வாக்களிப்பு நடைபெறுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

புதிய திகதி பற்றிய அறிவிப்பை தேர்தல் திணைக்களம் நேற்று சகல மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் 'பக்ஸ்' மூலம் அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை கடந்த வாரம் தேர்தல் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ளாத யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சுயேச்சைக்குழுக்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மூலம் தேர்தல் பிரசாரம செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மூலம் தமிழில் பிரசாரம் செய்ய விரும்புபவர்கள் 01-693174 என்ற தொலைபேசி இலக்கத்துடனும்,ஆங்கிலமூலம் பிரசாரம் செய்ய விரும்புபவர்கள் 01-696271 என்ற இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள வேண்டும்.

ரூபாவாஹினி மூலம் பிரசாரம் செய்ய விரும்புபவர்கள் 01-595805 என்ற இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள வேண்டும் எனவும் - தெரிவிக்கப்பட்டது (இ-7)


(78203)




வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!

உரிமைக்கு குரல் கொடுப்போம் - மக்கள்
உறவுக்கு எங்கள் கரம் கொடுப்போம்!
விடியலுக்கு உயிர் கொடுப்போம் - மக்கள்
விழிநீரை நாமே துடைத்தெடுப்போம்!

ஈ.பி.டி.பி.

ஈ.பி.டி.பியின் ஏற்பாட்டினால் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் புனரமைப்புக்கு தலா 140 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.


## குறுகிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்துக்கு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனவும் யாழ். மாவட்ட முன்னாள் எம்.பியும், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவும் இணைத் தலைவர்களாகப் பணிபுரிந்தனர்.

இக்கூட்டத்தில் வடக்கு- கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி, ஆளுநரின் இணைப்புச் செயலாளர் எஸ். கணேசநாதன் மற்றும் மாகாணசபை அமைச்சுக்களின் செயலாளர்கள் பலரும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

நேற்றைய இணைப்புக்குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வமான முடிவுகள் ஒருசிலவே என்றும் -

ஏனைய விடயங்கள் - கோரிக்கைகள் - நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதியுடனேயே கூட்டம் முடிவுற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க உயர் அதிகாரிகள் மிகப் பலருக்கு தமது கோரிக்கைகளை முன்வைக்கவோ கருத்துக்களை தெரிவிக்கவோ வாய்ப்பிருக்கவில்லை. அதனால் அவர்கள் பெரும் ஏமாற்றமும் மனக்கவலையும் அடைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

சில அதிகாரிகள் பேசுவதற்கு எழுந்த போதிலும் அவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க அனுமதிக்கப்படவில்லை.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையிலும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இணைப்புக் குழுவின் தலைவராக எந்த அடிப்படையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார் என்பது குறித்து யாழ்ப்பாண அரச அதிபர் தெளிவுபடுத்த வேண்டும் என்று ரெலோவின் செயலாளரும் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கேட்டுக்கொண்டார். (அ-5-7)


SUBRA (14)

சித்தன்கேணி

Spoken English and Grammar

பிரிவு II

by. BRITTO

Tu., Th.- 6.30-7.30

(78269)



இன்றைய வீடியோ CD வெளியீடு

சேது புகழ்

அபிதாவின்

தேவதாசி

மூர்த்தி வீடியோ

மானிப்பாய்

(C/12914)


## சாவகச்சேரியில் பெண் பலி!

தென்மராட்சியில் இடம்பெற்ற அசம்பாவிதம் ஒன்றில் உயிரிழந்த சாவகச்சேரி சிவன் கோயில் வீதியைச் சேர்ந்த திருமதி சிவராசா ராஜேஸ்வரி என்ற வயோதிபப் பெண்ணின் அனாதரவான சடலம் சாவகச்சேரிப் பகுதியில் அடக்கம் செய்யப்பட்டதாக வவுனியாவுக்கு கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது (இ-8)

## இணைப்புக்குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச்செயற்பாடு நீதியும், நியாயமுமான தேர்தலை நடத்த உதவமாட்டாது என்றும் - அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்தகைய அரச அதிகாரிகளை இந்தக் கூட்டத்தில் பங்குபற்ற வேண்டாம் என்று கோரவேண்டும் எனத் தேர்தல் ஆணையாளரிடம் அந்தஅணி கேட்டுள்ளது.

அதே சமயம் இது விடயமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத்தலைவர் வீ.ஆனந்த சங்கரியும் கடுங்கண்டனத்தையும் விசனத்தையும் தெரிவித்து ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (இ-3)

## 16 சடலங்களும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலங்களை ஒப்படைப்பதற்காக தென்மராட்சிப் பகுதியில் இருதரப்பினரும் தாக்குதல் நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-15-139)

## கரு ஜெயசூரியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்வட் சில்வா உட்பட கட்சியின் முக்கிய தலைவர்கள் பிரசார வேளையில் ஈடுபட்டிருந்த சமயம் வாகனம் ஒன்றில் வந்த குழு ஒன்று கிரனேட்டை வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத்தாக்குதலில் கருஜெயசூரியாவின் இணைப்புச் செயலாளர் ரஞ்சன் பண்டார, ராகம பிரதேச சபை உறுப்பினர் ஜயதிலக ஆகியோரும் காயமடைந்தவர்களில் அடங்குவர்.

கரு ஜெயசூரியா, அநுரா பண்டாரநாயக்க, ஜோன் அமரதுங்க ஆகியோர் காயம் இன்றித் தப்பினர். (இ-3-4)


முக்கிய பொதுக் கூட்டம் BIT

கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட BIT தேர்வுப் பரீட்சைக்கான முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை முடிவுகளை எமது நிறுவனத்தில் பார்வையிடலாம். தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான பிரத்தியேகக் கடிதங்கள் கடந்த திங்கள் முதல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இருந்து தேர்வுசெய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்குமான முக்கிய கூட்டம் இன்று புதன்கிழமை (13/09/2K) காலை 11.00 மணிக்கு IIS தலைமை அலுவலகத்தில் இடம்பெறும். அனைத்து மாணவர்களும் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

(C/12891)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பரிசுத் தினம்

காலம் : 15.09.2000 வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி
இடம் : குமாரசுவாமி மண்டபம்

பிரதம விருந்தினர்
கலாநிதி க.குணராசா
(பிரதேச செயலர், நல்லூர்)

பரிசில் வழங்கல்
திருமதி கமலா குணராசா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்

(C/12873)



Member of ITrain (U.S.A)

பொதுக் கூட்டமும் கலந்துரையாடலும்

BIT

இப் பரீட்சையில் சித்தியடைந்த யாழ். மாணவர்கள் அனைவரையும் IBMS நிறுவனம் வாழ்த்துகின்றது. அனைத்து மாணவர்களினதும் பெறுபேறுகளை எமது காரியாலயத்தில் பார்வையிடலாம்.

இக்கற்கைநெறி சம்பந்தமாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் I.C.T இயக்குநருடன் கலந்துரையாடிய சில முக்கிய விடயங்கள் பற்றி இன்று (13.09.2000) புதன்கிழமை மாலை 2.00 மணிக்கு ஆராயப்படவிருப்பதனால் அனைத்து மாணவர்களும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இன்றைய கலந்துரையாடலில் இக் கற்கைநெறி சம்பந்தமான கையேடு ஒன்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

Note: இப் பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும் யாழ்.மாவட்டத்தில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் உரியது.

IBMS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2000 / 2001

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்திற்கான தெரிவுப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெறாதவர்கள் எமது தலைமைக் காரியாலயத்தில் நேரடியாக வந்து பெற்றுக்கொள்ளவும்.

பரீட்சை நிலையம்:
- யாழ். இந்து மகளிர் கல்லூரி
- வட்டு. இந்துக் கல்லூரி

காலம்: இன்று 13.09.2000 புதன்கிழமை காலை 10.00 மணி (S.L.T)

Director (Ad)

IBMS NO.701, K.K.S. ROAD, JAFFNA.

(C/12899)



இதய அஞ்சலி

முதுபெரும் தமிழறிஞரும் சைவப் பெருவள்ளலுமான
இலக்கண வித்தகர் இ.நமசிவாயதேசிகர்

அவர்கள் சென்னையில் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைந்தேன். அன்னாரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி.

கலாபூஷணம், சிற்பச் சக்கரவர்த்தி
ஆ.ஜீவரட்ணம் ஆச்சாரியார்

(C/12916)



மரண அறிவித்தல்

Dr.அப்பாக்குட்டி செல்வராசா (R.M.P)

மீசாலை வடக்கு, புத்தூர்ச் சந்தியைச் சேர்ந்த அப்பாக்குட்டி செல்வராசா (வைத்தியர்) 12.09.2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீலாவதியின் அன்புக் கணவரும் சாந்தகௌரி(ஆஸ்திரேலியா), சாந்தகலா ஆகியோரின் அன்புத் தந்தையும் அம்பிகைபாலன் (ஆஸ்திரேலியா), ஜெகநாதன்(பிள்ளை) ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்யா, பிரசாந், அஜந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.09.2000) புதன்கிழமை களஞ்சியம்தோட்டத்தில் நடைபெற்று காலை 11.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் வேரகொண்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

களஞ்சியம்தோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
ஜெகநாதன் (பிள்ளை) (மருமகன்)
க.செல்வரத்தினம் (போட்டோ செல்வம்) (மைத்துனர்)

(C/12915)



நீதியான சமுதாயம், நேர்மையான உழைப்பு,
இனங்களின் சமத்துவம்
இவை எங்கள் இலட்சியம்
தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்



க.சுபத்திரன்
(றொபேட்)

சுயேச்சைக் குழு - 02



X



அ.வரதராஜப்பெருமாள்

(78270)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-09-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.